


26.12.2015 ஓய்வுபெற்ற எங்கள் அதிபரும்

மணிவிழா நாயகருமாகிய

திருவாளர் நாகநாதபிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின்

(B.Ed Sp Maths Trd SLPS I)

## மணி விழாவும்
## சேவைநலன் பாராட்டு விழாவும்

# சுப்ர பஞ்ச நாதம்



29.09.2016

# "சுப்ர பஞ்ச நாதம்"

## யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

## புங்குடுதீவு - 01

அதிபர் நாகநாதபிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின்
மணிவிழாவையொட்டி ஆக்கப்பெற்ற
மலர் வெளியீடு.

**பாடசாலைச் சமூகம்**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய**
**மகளிர் வித்தியாலயம்**
**2016**

# சுப்ர பஞ்சநாதம் மலர்க் குழுவினர்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திருமதி. த. ரவீந்திரன் |
| தலைவர் | : | திரு. க. ஜீவசீலன் |
| செயலாளர் | : | திரு.க.மதிரூபன் |
| பொருளாளர் | : | திரு. இ. கார்த்திகேயன் |
| இதழாசிரியர் | : | திருமதி. சு. சிவானந்தன் |
| பிரதிநிதிகள் | : | திருமதி. கே. அன்பரசன் |
| | | செல்வி. ந. நித்தியானந்தன் |
| | | திருமதி. ம. ஸ்ரீதயாளன் |
| | | திருமதி. கி. ஸ்ரீகரன் |
| | | திருமதி.கெ.சாந்ததிலீபன் |
| | | திரு. சு. பிரபாகரன் |
| | | திரு.க. வாசுதேவன் |

## பாடசாலை தூரநோக்கு

“சமநிலை ஆளுமையுள்ள நற்பிரசைகளைக் கொண்ட சமூகம்”

## பாடசாலை பணிக்கூற்று

“நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய மாணவர் சமூகத்தை உருவாக்குவதற்கும், அபிவிருத்தி தொடர்பான இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கும், சமூகப் பேராசான்களின் உதவியுடன் தேசிய கல்விக் கொள்கை ஊடாக சமநிலை ஆளுமை உள்ள நற்பிரசைகளை உருவாக்குதல்”

# தமிழ்த் தாய் வாழ்த்து

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே!
மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே!
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரனின் வீரமும், வெற்றியும் நீயே!

தாழ்ந்திடு நிலையினில் உனை விடுப்பேனோ?
தமிழன்எந் நாளும் தலைகுனி வேனோ?
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நீஉயிர் நான்மறப் பேனோ?

செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!
நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே!

முந்திய நாளினில் அறிவும் இலாது
மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது
செந்தாமரைக் காடு பூத்தது போலே
செழித்தஎன் தமிழே ஒளியே வாழி!

# தமிழ் மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன தான தந்தானே.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

## ஆசிரிய கீதம்

ஆ.... ஆஆ... ஆ ஆஆஆ ஆஆஆ..,
ஆ.... ஆஆ... ஆ ஆஆஆ ஆஆஆ..,

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை - நல்ல
பாதையில் சேர்க்கும் பணி எமதே...... (முத்து முத்தான...)

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாம் - அவன்
தன்னந் தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்....... (முத்து முத்தான...)

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் - உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்.... (முத்து முத்தான...)

கற்பித்தல் கற்றல் நிகழ்த்திடவே - நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையை பேணி ஏற்றே- ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்.. (முத்து முத்தான...)

# வாழ்த்துச் செய்தி



தீவகக் கல்வி வலயத்தில் யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாசாலையில் அதிபராக் கடமையாற்றி 2015 டிசம்பரில் ஓய்வுபெற்ற உயர் திரு. நாகநாதப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

புங்குடுதீவு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி வித்தியாலயத்தில் கணித ஆசிரியராக தனது சேவையை ஆரம்பித்த இவர் பல பாடசாலைகளில் கடமையாற்றி இறுதியில் யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் ஆசிரியராக ஆறு வருடங்களும் அதிபராக பதினெட்டு வருடங்களுக்கு மேலாகவும் அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றியமையை இவ் வேளையில் நினைவு கூருகின்றேன்.

தீவகப் பாடசாலைகளில் 1990 இல் தீவகப் பிரதேசத்தினைவிட்டு இடம்பெயர்ந்து பின்னர் 1996ஆம் ஆண்டில் மீளவும் தீவகப் பிரதேசத்தில் இயங்க ஆரம்பித்தன. அத்தருணத்தில் எல்லாப் பாடசாலைகளிலும் உடனடியாக ஆரம்பிக்கப்படவில்லை. படிப்படியாகவே மீள ஆரம்பிக்கப்பட்டன. இப்பாடசாலையை மீள ஆரம்பிப்பதில் இவரது முயற்சி மிகவும் குறிப்பிடத்தக்கது. பாடசாலை மீள ஆரம்பிக்கும்போது செல்வி மகேஸ்வரி சுப்பிரமணியம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். அவர் 1997 செப்டெம்பரில் ஓய்வு பெற்றுச் செல்ல தொடர்ந்து திரு.நா.பஞ்சலிங்கம் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றார்.

இவர் பாடசாலையைப் பொறுப்பேற்ற காலம் மிகவும் நெருக்கடி மிகுந்த காலம் என்றே கூற வேண்டும். மிகவும் சிரமங்களுக்க மத்தியில் ஆசிரியர்கள், அதிபர்கள் கடமையாற்றிய காலம் அது. கல்வியை முன்னெடுத்துச் செல்வதில் இவர் பெரும் முயற்சி எடுத்தார். இப்பாடசாலை ஒரு பெண்கள் பாடசாலையென்பதால் மாணவர்களின் ஒழுக்கத்தில் விசேட கவனம் செலுத்தி வந்தார். தீவகக் கல்வி வலயத்தில் புங்குடுதீவுப் பிரதேச மாணவர்களின் ஒழுக்கத்தில் விசேட கவனம் செலுத்தி வந்தார். தீவகக் கல்வி வலயத்தில் புங்குடுதீவுப் பிரதேச மாணவர்களின் கல்வி அடைவுகள் பல்வேறு காரணிகளால் பின்னடைவாகவே காணப்பட்டன. எனினும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை உயர்த்துவதில் இவர் பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்தமையை யாரும் மறக்க முடியாது. அத்துடன் மாணவர்களின் இணைபாட விதான செயற்பாடுகளிலும் கவனத்தினைச் செலுத்தி வந்தார். இதன் பலனாக புங்குடுதீவு பாடசாலைகளில் இவரது பாடசாலை க.பொ.த (சா/த), ஏனைய கல்வி இணைபாடவிதான அடைவுகளில் முன்னிலையில் இருந்தன.

தனது பிரதேசத்தின் மீது பற்றுக்கொண்டு தனது வாழ்க்கை காலத்தின் பெரும்பகுதியை புங்குடுதீவுப் பாடசாலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய இவரின் சேவையை இவ்வேளையில் நயந்து பாராட்டி வாழ்த்துவதுடன் இவரது கல்விப் பணியும் சமூகப் பணியும் தொடர வேண்டும் என கேட்டுக் கொள்வதுடன் அதற்கான உடல் உள ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் எல்லாம் வல்ல இறைவன் வழங்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


**வ.இராதாகிருஸ்ணன்**
**ஒய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்**
***தீவகக் கல்வி வலயம்***




மணிவிழா காணும் எங்கள் அதிபர்

திரு. நாகநாதபிள்ளை பஞ்சலிங்கம்
(B.Ed.Sp.Maths.Trd. SLPS-I)

# மகளிர் பாடசாலையின் மகத்தான அதிபர்



மணிவிழா நாயகனான உயர் திரு நா.பஞ்சலிங்கம் அதிபர் அவர்கள் பல்பரிமாணாங் களில் நோக்கத்தக்கவர். தீவகத்தின் நான்கு (04) பெண்கள் பாடசாலைகளில் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயமும் ஒன்றாகும். இப் பிரதேச பாடசாலைகளின் வரலாற்றை நோக்கும்போது பெண்களே அதிபர்களாகக் கடமையாற்றி வருகின்றார்கள். ஆனால் இவரது கண்ணியமான உயர் நடத்தையாலும், சிறந்த ஆளுமை மிக்க முகாமைத்துவ ஆற்றலாலும் இப்பாடசாலைச் சமூகம் உரிய கணிப்பையும், மதிப்பையும் வழங்கியது. இதனால் இவர் தொடர்ந்து இப்பாடசாலையில் இருபத்தி நான்கு வருடங்களில் (24) ஒன்பது (9) வருடங்கள் ஆசிரியராகவும் பதினைந்து (15) வருடங்கள் அதிபராகவும் பணிபுரிந்து பல சாதனை படைத்து கல்விப் பணிப்பாளர்களாலும் நன்மதிப்பைப் பெற்றவர்.

பெண் பிள்ளைகளின் உரிமைகளை மதித்தவர். பாடசாலை மாணவர்களின் ஆற்றல் ஆளுமைக்கான மிகத் துல்லியமாக மதிப்பீடு செய்து அவர்களால் ஆற்றக் கூடிய சாதனைகளுக்கு வழி காட்டியவர். கலை நிகழ்ச்சியாயினும் சரி, உடற்பயிற்சிப் போட்டியாயினும் சரி, விளையாட்டுப் போட்டியாகினும் சரி மாணவர்களைப் பங்குபெறச் செய்து சாதனை நிலை நாட்ட வழி சமைத்துக் கொடுத்தவர். அந்த வகையில் எடுத்துக் காட்டாக கவிதைப் போட்டி ஒன்றில் தேசிய ரீதியில் சாதனை படைத்தமையைக் குறிப்பிடலாம்.

தமது சேவைக் காலத்தில் 36 வருடங்களில் முப்பது வருடங்கள் (30) புங்குடுதீவுப் பிரதேசத்திலேயே சேவையாற்றி பிரதேசப் பற்றை எடுத்துக் காட்டியவர். கல்வியில் கட்டாயக் கல்வியை வலுப்படுத்துவதற்காக பாடசாலைக்கு ஒழுங்காக வராத மாணவிகள், இடை விலகிய மாணவிகள் வீடுகளுக்குச் சென்று கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி மீண்டும் பாடசாலையில் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியவர்.

கணித ஆசான் என்ற வகையில் எண்ணையும், எழுத்து வாசிப்புத் திறன் குறைந்த மாணவியர்க்கு பிரத்தியேக வகுப்புக்களைத் தானே முன்னின்று நடத்தியதுடன் முறைசாராக் கல்வி நடவடிக்கைகளை வலயத்தினதும் வெளிநாட்டு நிதியுதவியுடன் முறைசாராக் கல்விச் செயற்றிட்டத்தினை பாடசாலையில் செயற்படுத்தியவர்.

இன்னும் இவரது மகத்துவத்தை பல பக்கங்களில் எழுதலாம். ஒரு ஆசிரியர், அதிபர் எப்படிப் பணியாற்ற வேண்டுமோ அதற்கு இவர் வரைவிலக்கணமானவர். இவரது பிள்ளைகளும் கல்வியில் மேலோங்கி நிற்பதும் நோக்கற்பாலது.

பெண்கள் பாடசாலையை இப்படி நீண்ட காலமாக நடத்தி மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் பெற்றோர் சமூகத்தின் மத்தியிலும் நன்மதிப்பை பெற்ற நம் அதிபரை பல்லாண்டு காலம் சீரும், சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.க.கணபதி**
**ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்**
**தீவகம் (நல்லூர் – யாழ்ப்பாணம்)**

# கல்விப் பணிக்காக தன்னை அர்ப்பணித்த மகான்



மணிவிழா நாயகன் திரு.நா.பஞ்சலிங்கம் அவர்களை 1999ல் தீவக கல்வி வலயத்திற்கு கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளராக வருகை தந்த காலத்திலிருந்து அறிமுகமானவர். 15 ஆண்டுகளுக்கு மேலாக புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இக் கால கட்டத்ததில் இப்பாடசாலைக்கு தனி தரிசிப்பாகவும் குழு தரிசிப்பாகவும் சென்று பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளை மதிப்பீடு செய்த வகையில் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செய்யப்பட்ட மகான் தான் திரு.நா.பஞ்சலிங்கம் அவர்கள். இவரது கல்விப் பணி வாழ்வு முழுவதும் "அன்பு" எனும் ஆயுதத்தினால் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சமுதாய நலன் விரும்பிகளை வழிநடத்தி வெற்றி கண்டவர். நேர முகாமைத்துவத்தை சிறப்பாகக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். அதிபராக சேவையாற்றிக் கொண்டும் காலை, மாலையென கணிதத்தை மாணவர்களுக்கு போதித்து சித்தி பெற வைத்தவர். அமைதியானவர். பழகுவதற்கு இனிமையானவர். தனது பணியில் ஏதாவது விளக்கமின்மை அல்லது சந்தேகம் வந்துவிட்டால் அதில் விளக்கம் பெறும் வரை வாதிட்டு சந்தேகத்தை போக்கிக்கொள்ளும் சுபாவம் உடையவர். புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் பாடசாலையில் 20 வருடங்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றியமை பாராட்டுக்குரியது. கல்விப் பணிக்கு மேலாக சமூகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்ட நல்மனம் படைத்த ஒரு சமூகவியலாளன். இவரது ஓய்வு காலம் இறைவன் துணையோடு உடல் உள நலத்தோடு வாழ்ந்து இவரது கல்விப் பணி, சமூகப் பணி தொடார வாழ்த்தி நிற்கின்றேன்.

**அ.ஸ்ரனிஸ்லாஸ்**
**ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்**
**கல்வி அபிவிருத்தி தீவக கல்வி வலயம்**

# என் உள்ளத்தில் உதித்தவை....



கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதிகளாகவுள்ள தீவுக் கூட்டங்களில் எம் யாழ்ப்பாணத்தின் தென்திசையில் சப்த தீவுகளுக்கும் நடுவில் செந்தமிழும் சிவநெறியும் செழிப்புற்றோங்கி சரித்திரப் பிரசித்திபெற்ற பல ஆலயங்களையும், சைவ சித்தாந்த அறிஞர்களையும் வேதம் ஓதும் அந்தணச் சிவாச்சாரியார்களையும், பிரபல வர்த்தகப் பெரு மக்களையும், கல்விமான்கள், வித்துவான்கள், சமூகப்பெரியார்கள் அத்தனை பேரையும் தன்னகத்தே அடக்கி பொன் கொழிக்கும் பூமியே புங்குடுதீவு. அந்த தீவிலே கிழக்கே உதயசூரியன் உதிப்பதுபோல் வடதிசையிலே சுப்பிரமணியர், மகேஸ்வரன் ஆகிய தெய் வங்கள் அருள்பாலிக்கும் வகையிலே அமைந்திருக்கிறது. புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம். அவ் வித்தியாலயத்தில் தண்மதியாய் வீற்றிருந்து இன்று ஓய்வு நிலை காணும் திரு.ந.பஞ்சலிங்கம் அவர்கள் இந்நாளிலே வாழ்க வளமுடனென வாழ்த்தி நிற்கின்றேன்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பதற்கமைய எங்கள் எல்லோருக்கும் ஆரம்ப கல்வியை தந்த கல்லூரியும், அங்கு கல்வி கற்பித்த உபாத்தியார்களையும் இந்நாளிலே சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். மாணவர் உறுதியான நல்ல இலட்சியங்களை உடையவர்க ளாக விளங்கி, உயர் நோக்கங்களுக்காக தம்மைப் தயார்படுத்தி எதிர்காலத்தில் செயலாற்றக் கூடியவராக உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.

நம்மூரார் எல்லோரும் நல்லவரே. எம் மண் எவரையும் தீயவர்களாக உருவாக்க வில்லை. எம் மண்ணுக்கு மட்டுமல்ல சென்ற இடமெங்கும் கல்வியைக் கொடுத்து வந்த கரங்கள் என்றும் வாழி. ஆசாரமும் ஒழுக்கமும், சூழ்ந்த பல்துறை அறிவும் கொண்ட இவர் அன்பான பேச்சின் மூலம் மக்களை கவர்ந்தவர். இவரின் பண்புகள் சிறந்தவையாகும்.

கல்விப் பணியை இற்றைக்கு ஊட்டி பல வருடம் கடந்தாலும் அவரின் மகத்தான சேவை மறையாது. தன் சொந்த முயற்சியினாலும் அயராத உழைப்பினாலும் முன்னேறிய இவர். கல்விப் பணியால் அயராத உழைப்பு கொண்டு வாழ்நாள் முழுவதும் கல்வித் தொண்டாற்றியவர்.

பிறப்பதும், வளர்வதும், வாழ்வதும் பெரிதல்ல. ஒரு மனிதன் தன் வாழ் நாளில் தான் பிறந்த மண்ணுக்கும் தாய் மண்ணின் மக்களுக்கும் தன் குடும்பம் தன் உறவுகளுக்கும். தன்னால் செய்யக்கூடிய சமுதாயத் தொண்டுகள், தேவைகள் அறிந்து செய்யும் வேலைகள் இவரின் பண்பாகும்.

பல்வேறு திறமைகளும் உயர்ந்த மனப்பான்மையும் கொண்ட குறுகிய காலத்தில் தம் பணிதனை விட்டு பிரிந்தமை புங்குடுதீவு கிராம மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும். தங்களின் சேவைகள் என்றுயர் நிலையாய் நிலைத்திருக்கும் மக்களின் மனங்களிலும் வாழ்ந்து கொண்டேயிருப்பார்.

"என் பொருட்டு எவரும் சிரமமடையலாகாது" என்பதுவே அவர் இறுதியாகக் கொண்ட நன் நெறியாகும். அவ் நெறியே வாழ்ந்தவர் திரு.ந.பஞ்சலிங்கம் அவர்கள். பலரது சிரமம் தீர்க்க அவர் கிராமத்துக்காய்ச் செய்த சேவைகள் தந்த ஆத்மபலத்துடன் இவ் வாழ்த்துச் செய்தியை பகர்கின்றேன்.

இந்நாளிலே மட்டுமல்ல எந்நாளிலும் தங்களின் பணி மறையாது, மாறாது. பலரால் வளர்க்கப்பட்ட இப்பள்ளி பலரைக் கௌரவித்த இப்பள்ளி, பல பேரைக் கௌரவித்து வழியனுப்பி வைத்து இப்பள்ளி இன்னும் பல இளையவர்களை எடுத்து வளர்த்து வாழ்த்த வேண்டும். இன்னும் பலர் மேடைகளை அலங்கரிக்க வேண்டும்.

இவரின் அன்பார்ந்த நற்குணங்களுக்கு ஈடாக பஞ்சலிங்கத்திற்கென பஞ்சலிங்கங்களை பெற்றெடுத்து கல்வி கேள்வியிலும், ஒழுக்கங்களிலும் சிறந்து விளங்கும்படியாக நல்ல புத்திரர்களை தேசத்திற்கு வழங்கி அவர் வழியே நல் ஒழுக்கத்திலே ஈடுபடுத்தி இல்லறத்திலே நல்லறம் கண்டு துணைவியாருடன் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்கி சிறந்த நல் ஆசானாயும், நற்தந்தையாயும் திகழ்ந்தார்.

தங்களின் பணியானது இன்னும் பல நூற்றாண்டு ஊழிதோறுாழியாக நீடுழி காலம் வாழ வேண்டும். தங்களின் கல்விக்கீர்த்தி கிராமம் தோறும் பரவி வர வேண்டும் வாழ்விலே வளமும் நலமும் பெற்று சுபீட்சமாய் வாழ எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவார் என்று கூறி இந்நாளிலே வாழ்க வளமுடன் என்று வாயார வாழ்த்தி நிற்கின்றேன்.

வாழ்க வளமுடன்

**பொ.ஜமுனாதேவி,**
**அறங்காவலர்,**
**வடஇலங்கை சர்வோதயம்.**

# சேவை நலன் போற்றல்



புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம் பாடசாலையின் நூல் வெளியீட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இப்பாடசாலையின் சிறப்பாக இதன் அருகில் சிவன் கோயில், கந்தசுவாமி கோயில் என்பன உள்ளதே ஆகும். இப்பாடசாலையின் தொண்ணூறு ஆண்டுகள் கல்வி பணியால் பல தலைமுறைகள் நன்மை பெற்று இருப்பதுடன் இப் பாடசாலையின் பணியை அளவிட முடியாது. இப்பாடசாலை தீவுப்பகுதியில் குறிப்பாக புங்குடுதீவில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் ஒன்றாகும். 1926, 1940களில் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் இப்பாடசாலை யில் பங்கும் பணியும் மிகவும் சிறப்பு மிக்கது. அன்று புங்குடுதீவில் எழுத்து அறிவும், கல்வி அறிவும் மிகக் குறைவு பெண்களின் நிலைமை சொல்வதற்கு இல்லை. இந்நிலையில் இப்பாடசாலையின் தோற்றம் சமூகத்தில் பெரிய மாற்றத்திற்கு வழிவகுத்தது. சின்னத்தம்பி சதாட்சர சண்முகதாஸ், கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம், தம்பையா, துரைசிங்கம் போன்றோர் இப்பாடசாலையிலேயே ஆரம்பக் கல்வியைக் கற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலை ஆரம்பித்த காலத்திலிருந்து காலத்துக்கு காலம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்ட பொழுதும் நல்ல அதிபர்களாலும், சமூக பெரியார்களாலும் கூட்டி கணிக்கப்பட்டு இன்றைய நிலையை எய்தியுள்ளது. 1991ம் ஆண்டு இடம்பெயர்வினால் ஏற்பட்ட தாக்கத்தில் இருந்து இன்னும் புங்குடுதீவு பாடசாலைகள் விடுபடவில்லை. இதற்கு சுப்பிரமணியம் பாடசாலையும் விதிவிலக்கல்ல. புங்குடுதீவு ஆசிரியர்கள் அன்று கல்விப் பணியுடன் சமூக, சமய, அரசியல் பணிகளில் முன்னின்று உழைத்தனர். 1926 - இன்றுவரை புங்குடுதீவின் வளர்ச்சியில் இவ் ஆசிரியர்களின் சமூக சமுதாய பணி மகத்தானது இப்பாடசாலை மாணவர்களுக்கு நூல் வெளியீட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மகிழ்கிறேன். ஏன் என்றால் நானும் இங்கு ஆரம்பக் கல்வியை கற்றதுடன் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றேன் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**செல்வி. ம. சுப்பிரமணியம்**
**(ஓய்வு பெற்ற அதிபர்)**

# வாழ்த்துரை

மலர்க்கரம் விரிகின்றது அதிபர் இதயத்திலிருந்து



முத்தமிழும் சைவமும் செழித்து வளரும் இறையருள் நிறைந்த கிராமம் புங்குடுதீவு. எம்முன்னோர் எமக்கு வாழ்ந்து காட்டிய அறநெறிகளையும் நற்பண்புகளையும் இறைபக்தியையும் தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிப்பவை பாடசாலைகளும் ஆலயங்களும் ஆகும்.

பாடசாலை மாணவர்கள் மனதில் சமநெறிகளையும் மன அமைதியையும் ஒழுக்கத்தையும் சூழலுடன் பொருத்தப்பாட்டையும் நாட்டுப்பற்றையும் வளர்க்க வேண்டும். மனிதன் மனிதனாக வாழ கல்வி இன்றியமையாதது.


இந்த வகையில் புங்குடுதீவிலுள்ள சிறார்கள் நற்பிரஜைகளாக வளர வேண்டும் என்ற நோக்குடன் யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் 7 ஆண்டுகளாக ஆசிரியராகவும் 18 ஆண்டுகள் அதிபராகவும் சேவையாற்றி ஓய்வு நிலை அடையும் அதிபர் நாகநாதப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளியாகும் இம்மலர் பாடசாலை வரலாறுகளையும் ஆசிரியர்கள் மாணவர்களின் ஆக்கங்களுடன் மணிவிழா நாயகனாம் எங்கள் அதிபரின் காலத்தில் பாடசாலை சாதித்த சாதனைகளை மையமாகக் கொண்டு "சுப்ரபஞ்சநாதம்" மலர் வெளியிடுவதில் பெரும் மகிழ்வு அடைகின்றோம்.

ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் எங்கள் அதிபர் நா.பஞ்சலிங்கம் அவர்கள் ஆற்றிய சாதனைகள் என்றும் எம் வித்தியாலயத்தில் நாதமாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் சுப்ரபஞ்சநாதம் என்ற பெயர் சூட்டி இம் மலர் வெளியிடுகின்றோம்.

இம் மலருக்காக அர்பணித்த அனைத்து இதயங்களுக்கும் நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கின்றோம். மணிவிழா நாயகன் நா. பஞ்சலிங்கம் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துக் கூறுகின்றேன்.

அதிபர்
திருமதி.ரவீந்திரன் தக்ஷினி

# ஆசிரிய நலன்புரிச் சங்க தலைவரின் வாழ்த்துச் செய்தி



அலை கொஞ்சும் எழில் தீவாம் புங்கை நகரில் முருகனின் அருளைப் பெற்று விளங்குவது யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயமாகும். எனது ஆசிரியர் சேவையில் 25 ஆண்டு காலம் தீவகக் கல்வி வலயத்தில் சேவை ஆற்றி வருகின்ற ஓர் ஆசிரியர் என்ற வகையால் எனது சேவைக் காலத்தில் எத்தனை அதிபர்களைச் சந்தித்து வந்திருக்கின்றேன். எத்தனை அதிபரின் கீழ் சேவையாற்றி வந்திருக்கின்றேன். தீவகக் கல்வி வலயத்தின் உள்ளக இடமாற்றத்திற்கு அமைவாக இப்பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தபோது இப்பாடசாலையில் ஒரு மனிதனைக் கண்டேன். மனித நேயம் உள்ள ஒரு அதிபரைக் கண்டேன். கல்வி மாணவர்களுக்கு ஓர் நல்ல தந்தையாகக் கண்டேன். கற்கின்ற ஆசிரியர்களுக்கு நல்ல ஆளுமையுள்ள சிறப்பான ஒரு மனிதனைக் கண்டேன். பெற்றோர்கள், பழைய மாணவர்களுக்கு வழிகாட்டுகின்ற ஒழுக்கமுள்ள மனிதரைக் கண்டேன். அவர் யாருமில்லை அவர் தான் இவ் வித்தியாலயத்தில் 25 ஆண்டு காலமாக ஆசிரியராகவும் அதிபராகவும் சேவையாற்றி ஓய்வு நிலை அடையும் அதிபர் திரு.நாகநாதப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்கள் என்று சொன்னால் மிகையாகாது.

அதிபர் அவர்களின் ஓய்வு பெறும் இவ்வேளையில் பாடசாலை சமூகம் கொண்டாடும் மணிவிழாவை சற்று எண்ணிப் பார்க்கிறேன். பாடசாலை சமூகத்தின் உணர்வுகளை சிந்தித்துப் பாாக்கின்றேன். அவ் உணர்வுகள் அனைத்தும் அதிபரின் காலத்தில் இப்பாடசாலையில் விதைத்த வித்துக்கள் அவ்வித்துக்களை முத்தாக்கி பாடசாலை சமூகம் வெளியிடும் "சுப்ர பஞ்ச நாதம்" என்ற மலருக்கு வாழ்த்துக் கூறுவதில் பெரும் மகிழ்வு அடைகின்றேன்.

**கனக ஜீவசீலன்**
**தலைவர்**
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.**

# நூலாசிரியர் உள்ளத்திலிருந்து!




இந்து சமுத்திரத்தின் நித்திலம் என்று போற்றப்படுகின்ற இலங்கைத் தீவின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடா நாட்டின் சப்த தீவுகளில் நடுநிலையமாக விளங்குவது புங்குடுதீவாகும். தீவகக் கல்வி வலயத்தில் வேலணைக் கோட்டத்தின் மகளிர் வித்தியாலயம் என்ற பெருமைக்குரிய ஒரு பாடசாலையாக திகழ்வது யா/ புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயமாகும். இவ் வித்தியாலயத்தில் 25 ஆண்டு காலமாக ஆசிரியராகவும் அதிபராகவும் சேவையாற்றி ஓய்வுநிலை பெறும் அதிபர் திரு. நாகநாதபிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின் மணி விழாவைக் கொண்டாடும் தினத்தில் பாடசாலை வரலாற்றையும் பாடசாலை, ஆசிரிய மாணவர்களின் ஆக்கங்களையும் அதிபரின் காலத்தில் பாடசாலை சாதித்த சாதனைகளையும் மையமாகக் கொண்டு "சுப்ர பஞ்ச நாதம்" எனும் மலரை வெளியிடுவதில் பெருமையடைகின்றேன். குறுகிய காலப் பகுதியில் இந்நூலை வெளியிடுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து இதயங்களுக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**திருமதி.சுதர்சினி சிவானந்தன்**
**மலராசிரியர்**
**மலர்க்குழு**

**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.**

**தீவகக் கல்வி வலயத்தில் யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றி 2015 டிசம்பரில் ஓய்வு பெற்ற உயர்திரு.நாகநாதப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவிற்கு வாழ்த்து வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.**



பொன் கொடு தீவெனும் - புங்குடுதீவினில்
பொலிவுடன் திகழ்ந்த - புண்ணிய சீலன்
நானிலம் தனிலே நலமுடன் வாழ்ந்த
நாகநாதர் நற்தவத்தால் பெற்ற
பக்குவமானவன் பண்பினன் பஞ்சலிங்கம்
பரிவுளன் தெளிவுறு சிந்தைகொள்
சீர்மிகு சிறப்புடன் பாரினில் மலர்ந்தனன்
காசினி போற்றும் கவினுறு கல்வியை
மேதினிதனிலே மேன்மையுடன் கற்று - நற்
போதனை புகட்டிடும் புனித நல் ஆசானாய்
சாதனை படைத்த சற்குணவானன்
கணிதத் துறைதனில் கண்ணியமாக மலர்ந்து
கணக்குடன் வாழ்ந்த கண்ணியவான்
திகழ் ஒளி பரப்பிடும் புகழ்மிகு கலையகம்
சுந்தரத் தமிழ்க் குமரன் வந்துறை பதிதனில்
சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
இந்திர அழகுடன் இலங்கிடும் பள்ளி தனில்
இங்கிதமாகவே இனிய நல் அதிபராய்
இதமுடன் பணியதனைப் பதமுடன் புரிந்த
ஈடிணை யில்லா இனிய நல் இதயமே!

கடமை கண்ணிய கட்டுப்பாட்டினை
தட்டுப்பாடின்றி கண்டேன் - நின்பணியில்
மனிதரை மனிதராய் மதித்திடும் மாண்பினன்
மகத்தான கடமையில் மகிழ்ந்த நற் பெரியோன்
கொண்ட கடமையைக் குறைவின்றி
ஆற்றிக் கொண்டனனே!
வந்தோரை வரவேற்கும் வன்புறு நெஞ்சமே!
நொந்தவர்க்கும் கரம் கொடுக்கும்
பந்தமுள்ள பண்பினனே!
குறைவின்றிப் பணிகள் தனை
தளராது தலையாய் நின்று
நிறைவுற ஆற்றிய
கறை படியாப் புனிதனே!
தணிந்த நல் உருவே!
தளம்பா நிறை குடமே!
அழகுறு பணியை எழிலுடன் ஆற்றி நின்றீர்
ஆலயம் தொழுது ஆனந்தம் கண்டீர்

ஆளுமை சிவனின் அருளினைப் பெற்றீர்
தைப்பூசவேலவனை எப்பொழுதும் தொழுதே
ஓங்கார ரூபனின் பாங்கான அருள் கொண்டீர்
சகல சௌபாக்கியமும் பெற்ற
யோக்கியமானவரே, தாக்கமிலா உள்ளமே!
நோக்கியே வந்தது பாக்கியமாகவே!
அகவை அறுபது ஆலமர மெனவே
அழகு நிழல் பரப்பி ஞாலமதில் - என்றும்
நற் கோலமுற வாழ்க!
நின் சந்தானச் செல்வங்கள்
பொன் வாழ்வு கண்டு
இதமான துணையோடு
இன் வாழ்வு கொண்டு
இன்று போல் என்றும் - வாழ்க!
ஜெக மதில் நீவிர்!
அகம் குளிர வாழ்க வளமுடன்!

**இவ்வண்ணம்**
**ச.பேரின்பநாதன்**
**(அ.ப.சேவை I)**
**யா/புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் ம.வி.**

# Congratulatory Message form...



Indeed, I'm delighted to write my congratulatory message to "SubraPanchanatham" which is to be launched on account of our highly respected Principal Mr.N.Panchalingam's retirement after twenty five years of service in our school.

Truly speaking, I feel proud of having this good fortune to appreciate his talents and to commend his skilful administration, which is a milestone in the history of our school.

In my way of thinking, it isn't an exaggeration to say that his personal and leadership qualities are par excellence .Our school is, no doubt, still flourishing in all extra and co-curricular activities. Thanks to his decision and action taken together in one voice.

In fact, the book launch is certainly an overt sign of his ability and personality. It has also become evident that he is always beloved by students, teachers, parents and well-wishers. In fine, his worthy service was up to the mark and generous mind is praiseworthy. In conclusion, I, Commending his sacrifices made so far, wish him all success.

"May God be with him in finding his dreams real through SubraPanchanatham"

Mr.K.Mathiruban
Teacher of English
(J/Pungudutivu Sri SupramaniyaMahalirVidyalayam)

# உடற்கல்வி பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி



யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் 1990 ஆம் ஆண்டு காலடி எடுத்து வைத்து தொடர்ந்து 25 வருடகாலமாக இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் எங்கள் அதிபர் திருநாகநாதப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின் "சுப்பிர பஞ்ச நாதம்" எனும் நூலுக்கு உடற்கல்வி பொறுப்பாசிரியர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நல்லதிபராகவும், சிறந்த நிர்வாகியாகவும் நிறைந்த பண்பாளனாகவும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, மனித நேயமிக்க உயந்த மனிதனாக விளங்கி தனது காலப்பகுதியில் ஆற்றிய சேவைகள் பாராட்டத்தக்கதாகும்.

எமது சேவையினை நிறைவாகவும் மனத்திருப்தியுடனும் மேற்கொள்ளும்போது எமது வாழ்விற்கான சரியான பாதை அமையும் என்பது பேருண்மையாகும்.

திரு நாகநாதப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்கள் எளிமையும் பண்பும் அடக்கமும் மிக்க முன்னுதாரணமான மனிதனாக வாழ்ந்து அரும்பணியாற்றி இருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அதிபராக சேவையாற்றிய காலத்தில் பாடசாலையின் இணைபாடவிதான செயற்பாடுகளில் கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம், மெய்வல்லுநர் விளையாட்டுக்கள், பெரு விளையாட்டுக்கள் ஆகியவற்றுக்கு உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் வழங்கிய அதிபரின் பணி எமது மாணவர்கள் மூலம் சாதனை படைத்தமைக்கு காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

எவ்வேளைகளிலும் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து பாடசாலை விளையாட்டில் சாதனை படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஆதாரமாக அமைந்த அதிபர் அவர்கள் தனது ஓய்வு காலத்தில் இன்னும் சமூகப்பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக பல்லாண்டு காலம் வாழ இறைவனின் அருள் வேண்டிப் பிரார்த்திப்பதுடன் எனது பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.கார்த்திகேயன்**
**உடற்கல்விப் பொறுப்பாசிரியர்**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.**


மணிவிழா நாயகன் நாயகியுடன்

## மணி விழா காணும் நாயகனாம்
## எங்கள் அதிபரின் புகழ் பாடுவோம்

சுப்பிர மணிய மகளிர் வித்தியாலய முதல்வரே
எங்கள் அதிபரே பஞ்சலிங்கம்
அல்லல் பல போக்கிடும் எங்கள்
ஆற்றல் மிகு அதிபரே (சுப்பிரமணிய...)

தினம் தினம் எமது கல்வியினை
சீராக வழிநடாத்திய முதல்வரே
அறிவு பல உடையவர்
ஆற்றல் பல படைத்தவர் (சுப்பிரமணிய...)

சாந்த குண முடைய லிங்கம் அவர்
காந்தப் பார்வையினால் கவருவார் எம்மை
ஆளுமை பல உடையவர்
பதவிகள் பல படைத்தவர் (சுப்பிரமணிய...)

**உப அதிபர்**
**திருமதி.அ. கேதீஸ்வரி**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்**

# மணிவிழா நாயகரை வாழ்த்துகின்றோம்

மணிவிழா நாயகனாம் திரு. நா. பஞ்சலிங்கம் அவர்கள் புங்குடுதீவிலுள்ள ஊரதீவு, 7ம் வட்டாரம் எனும் வளம் கொழிக்கும் கிராமத்தில் திரு.நாகனாதபிள்ளை வியாளாட்சி தம்பதியருக்கு கடைசி மகனாக 1926.12.26 இல் பிறந்தார். சிறு வயது தொட்டே சுறுசுறுப்பும் கல்வியில் ஆர்வமும் கொண்டவராகக் காணப்பட்டார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியினை யா/புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யா/பரமேஸ்வராக் கல்லூரியிலும் மேற்கொண்டார். சிரேஷ்ட இடைநிலைக் கல்வியினை யா/வேலனை மத்திய கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். கல்வியில் தேர்ச்சி பெற்று சிறந்த நிலையினை அடைந்த அதிபர் அவர்கள் வேலை தேடிய வேளையில் ஆசிரியர் பணி அவரை நாடி வந்தது. அந்த வகையில் யா/புங்குடுதீவு இராசராஜேஸ்வரி வித்தியாலயத்திற்கு நியமனம் செய்யப்பட்டார். 03.09.1979இல் குருத்தொழிலில் காலடி வைத்த இளைஞராகிய திரு.நா.பஞ்சலிங்கம் அவர்கள் மாணவர்களுக்கு கணித பாடத்தினை புகட்டி வந்தார். அத்துடன் மாணவரின் நலனில் அக்கறை கொண்டு மாலை நேர வகுப்புக்களை நடாத்தி கணித பாடத்தில் சித்தியடையும் மாணவரின் எண்ணிக்கையினை அதிகரிக்கச் செய்ததுடன் அதிதிறமைச் சித்தியினை அதிக மாணவர்கள் பெறவும் வழி சமைத்தார். இடப்பெயர்வின் போது முல்லைத்தீவில் தமது சேவையினை ஆற்றிய வேளை மாணவர்கள பலரும் கல்வியைக் கற்க வசதயின்றித் தவித்த வேளையில் இலவசமாக கணித வகுப்புக்களை நடாத்தி மாணவர்கள் பயன்பெற உதவிய பாங்கு போற்றத் தகுந்ததாகும்.

ஆசிரியர் பணியில் பாடசாலையின் முகாமைத்துவ அணியினருக்கு உதவியாகவும், சக நண்பர்களுடன் நண்பனாகவும், மாணவர்க்கு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்ததோடு தமது அதிபர் பதவிக் காலத்திலும் சிறப்பான சேவையாற்றிப் பாடசாலையின் பெயரினை மலரச் செய்த பெருமையும் இவரையே சாரும் எனலாம். பாடசாலையின் வளங்களைப் புதுப்பித்தல், புனரமைப்புச் செய்தல், வளங்களைச் சேகரித்தல், கற்றலுக்கு வசதி செய்து கொடுத்தல் எனப் பாடசாலைக்கு இவர் செய்த சேவைகள் அளப்பரியன.

1997.08.24 முதல் அதிபர் பதவியினை ஏற்றுக்கொண்டு பாடசாலை முகாமைத்துவத்தின் தலைவராக இருந்து பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றார். அதிக மாணவர் உயர்தரக் கல்வியைப் பெறுவதற்குத் தடையாக இருக்கும் கணித பாட சித்தியின்மையைக் குறைப்பதற்காக பாடசாலையில் வேதனம் எதுவுமின்றி மாலைநேர வகுப்புக்களை நடாத்தி உயர்தரம் கற்கும் மாணவரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தார். அதிபரின் காலத்தில் வலைப்பந்தாட்டத்தின் மூன்று அணிகள் வலய சம்பியனாக திகழ்ந்தமை அவர் விளையாட்டுத்துறைக்கு வழங்கிய ஒத்துழைப்பை பறை சாற்றுகின்றது. தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவரின் சித்தி இவரது ஊக்கத்திற்கு எடுத்துக் காட்டாகின்றது. மேலும் தமிழ்த் தினப் போட்டிகளில் பாவோதல் 2ம் இடம் பேச்சு 3ம் இடம், மீனவ நடனம் 3ம் இடம் என்பன மாவட்ட மட்டத்தில் கிடைத்தமை இணை பாடவிதானத்திற்கு அதிபர் வழங்கும் ஆதரவிற்கு ஆதாரமாகின்றன. செம்பு நடனம் மாவட்டத்தில் பங்குபற்றியமை

என்பனவும் குறிப்பிடத்தக்கதாகும். கவிதை ஆக்கத்தில் மாகாணத்தில் முதலாமிடம் கிடைத் தமை, சிங்களப் போட்டியில் தேசிய மட்டத்தில் 3ம் இடம் கிடைத்தமை என்பனவும் இவரது சேவையின் மகத்துவத்திற்கு சான்று பகர்கின்றன.

இவ்வாறு கட்டுக்கோப்பான நிர்வாகக் கட்டமைப்பினைக் கடைப்பிடித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியதோடு சமூகப் பணிகளையும் ஆற்றி அதிபர் திரு. நா. பஞ்சலிங்கம் அவர்கள் அனைவர் மனங்களிலும் நிறைந்திருக்கின்றார்.

**செல்வி. நா.கேதீஸ்வரி**
**ஆசிரியர்.**

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றேன்

யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் 25 வருட காலமாக ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றிய திருவாளர் நாகநாதப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின் மணிவிழாவை பழைய மாணவர்கள் சார்பில் மனதரா வாழத்துகின்றேன்.

பாடசாலைச் சமூகத்தின் முழு ஒத்துழைப்புடன் எவ்வித இடர்பாடுகளின்றி தலைமைத்துவ பண்புகளுக்கேற்ப பாடசாலையின் பெருமையை தனது சேவைக் காலத்தில் மிளிரச் செய்த பெருமைக்குரிய அதிபர் பஞ்சலிங்கம் அவர்கள் என்று சொன்னால் மிகையாகாது. அவருடைய சேவை இளைப்பாறினாலும் எமது பாடசாலைக்கும் என்றும் அவசியம். அவர் செய்த சேவைகளை வெளிக்கொணரும் சுப்ரபஞ்சநாதம் என்றும் பாடசாலை நாதமாக இருக்கும் என்பது எனது முடிவு.

**திருமதி.சி.கமலேஸ்வரி,**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.**

# மணிவிழா நாயகனை போற்றுகின்றேன்

யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் 25 வருட காலமாக ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு நிலை அடையும் எங்கள் அதிபர் திருவாளர் நாகநாதபிள்ளை - பஞ்சலிங்கம் அவர்களின் மணி விழாவை பாடசாலை பெற்றோர்கள் சார்பில் மனதாரப் போற்றுகின்றேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் எங்களது பிள்ளை கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் முன்னேற்றமடையச் செய்து பாடசாலையின் பெருமையை நிலைநாட்டிய அதிபர் பஞ்சலிங்கம் அவர்கள் என்று சொன்னால் மிகை ஆகாது. அவருடைய பாடசாலைச் சேவை என்றும் மறக்கவோ மறைக்கவோ முடியாது. அவருடைய மணிவிழா சிறந்த முறையில் சிறக்கவும் அவருடைய சுப்ரபஞ்சநாதம் சிறந்த நூலாக மிளிரவும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி.சு.சிவதர்சினி,**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.**

# மணிவிழா நாயகரை போற்றி துதிப்போம்

இலங்கை திருநாட்டின் சப்த தீவுகளில் ஒன்றென விளங்கும் புங்குடுதீவில் பிறந்து புங்குடுதீவிலே மண்ணின் சேவையே மகத்தான சேவை என உணர்ந்து மண்ணிற்காக சேவை செய்தவரே.

புங்குடுதீவில் பெண் பிள்ளைகள் தனித்து நின்று சாதனை புரிய ஒரு களமாக விளங்குகின்ற ஒரே ஒரு பாடசாலை யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் ஓரிரு வருடமல்ல இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக அதிபராகவே பணியாற்றி பெண் பிள்ளைகள் கல்வியில் மட்டுமல்ல விளையாட்டுக்கள், நடனம், சங்கீதம் போன்ற கலைகளிலும் பொது அறிவு போட்டிகளிலும் மாணவர்கள் வெற்றி ஈட்டி சாதனை செய்ய ஊன்று கோலாக நின்று ஆசிரியர்களையும் மாணவர்களையும் வழிநடத்தினீர்கள்.

"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்ற வாசகத்தை மனத்திற் கொண்டு கடமையாற்றியதோடு ஆசிரியர்களையும் மாணவர்களையும் அதன்படியே ஒழுங்குகள் என்று வழிநடத்தினீர்கள். இதற்கு எடுத்துக் காட்டாக நாம் தரம் -5 புலமைப் பரீட்சைக்கு தேற்ற உள்ள காலப்பகுதியில் அதிபர் தனது வேலைகளை எல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு எங்களுக்கு மாலை நேர வகுப்பு, விடுமுறை காலங்களில் எல்லாம் வகுப்புக்கள் வைத்தார். ஆனால் அவர் பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்தார். அதனால் சிறந்த பயனைப் பெற்றார். மேலும் 2010ம் ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு கணித பாடத்திற்கு ஆசிரியர் இல்லாத போது தனது வேலைகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு மாலை நேர வகுப்புக்கள், விடுமுறை கால வகுப்பு என வைத்து அந்த வருடம் கணித பாடத்தில் மாணவர்கள் சிறப்புத் தேர்ச்சி அடைந்தார்கள். இவ்வாறு அதிபரின் பெருமைகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

தீவகத்தில் எமது பாடசாலை சிறந்த ஒரு பாடசாலையாக விளங்குவதற்கு பெரும் பணியாற்றியவர் எங்கள் அதிபரே தீவகத்தில் வலைப் பந்தில் எங்கள் பாடசாலை ஒரு அசைக்க முடியாத இடத்தில் இருப்பதற்கு முக்கிய காரணம் எங்கள் அதிபரே. இப்பாடசாலையின் அனைத்து பெருமைகளும் எங்கள் அதிபரையே சாரும்.

ஆசிரியர்களுடன் அன்பான முறையிலும் பண்பான முறையிலும் கலந்துரையாடி ஒவ்வொரு செயற்பாட்டையும் செயற்படுத்தினார். மாணவர்களுக்கு அதிபராக மட்டுமல்ல ஆசிரியராக சிறந்த தந்தையாக இத்தனை காலமும் வழி நடத்தி வந்தார்.

புங்குடுதீவில் எண்ணற்ற மாணவர்களையும் பெண்கள் உயர்ந்த நிலையில் இருப்பதற்கும் இப்பாடசாலை சிறந்தவொரு பாடசாலையாக இருப்பதற்கும் அதிபரின் அயராத உழைப்பும், கடமை உணர்வுமே காரணம். உங்கள் சேவைக் காலம் முடிவடைந்ததென பிரியாவிடை செய்தாலும், உங்கள் சேவை எம் மாணவர்களுக்க தேவை, காலமுள்ள வரை உங்கள் சேவை தொடர வாழ்த்துகிறேன்.

N. கீர்த்தனா
பழைய மாணவி

# மணிவிழா நாயகரை வாழ்த்துகின்றோம்

## யா/ புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்



அதிபர் – உயர்திரு

**நாகநாதபிள்ளை பஞ்சலிங்கம்**

**B.Ed.Sp.Maths. Trd, SLPS I**

பிறந்த இடம்: புங்குடுதீவு

பிறந்ததிகதி : 26.12.1955

ஆசிரியர் - யா/புங்குடுதீவு ஸ்ரீ ... வித்தியாலயம்

03.09.1979 - 16.09.1979

ஆசிரியர் - யா/புங்குடுதீவு ஸ்ரீ ... வித்தியாலயம்

17.09.1979 - 30.01.1983

ஆசிரியர் - யா/...

31.01.1983 - 31.12.1984

ஆசிரியர் - யா/...

01.01.1985 - 31.05.1989

ஆசிரியர் - யா/...

01.06.1989 - 30.04.1991

ஆசிரியர் - யா/புங்குடுதீவு ... வித்தியாலயம்

01.05.1991 - 17.06.1991

ஆசிரியர் - யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

18.06.1991 - 23.08.1997

பதில் அதிபர் - யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

24.08.1997 - 03.08.2000

அதிபர் - யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

04.08.2000 - 26.12.2015

சமூகப்பணி

...

கனடா புங்குடுதீவு

பழைய மாணவர் சங்கத் தலைவரின்

வாழ்த்துச் செய்தி

...

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்,

கனடா.

# யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்

இந்து சமுத்திரத்தின் நித்திலமாய் விளங்குகின்ற இலங்கைத் தீவினிலே மணி முடி போல் விளங்குவது சப்த தீவுகளுமாகும். இச்சப்த தீவுகளிலே நடுநாயகமாக விளங்குவது பொன்கொடு தீவென விளங்கிய புங்குடுதீவு. இத்தீவினிலே மங்கையர்க்கு அணியென எழிலுறக் கம்பீரத்துடன் காட்சி தருகிறது. யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

முன்னாளிலே செந்தமிழிற்கும் சைவத்திற்கும் ஏற்பட்டிருந்த நிலையைச் சமாளிப்பதற்காக தமிழ் மக்களின் விடிவெள்ளியாக அவதரித்தவர் ஆறுமுகநாவலர். "நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே? சுருதியெங்கே என்றார். யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்த ஆறுமுகநாவலர் சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்றிய பணி அளப்பரியது. அவ்வகையினிலே தமிழ் மொழியும் சைவமும் தழைத்தோங்க நாவலர் வகுத்த வழியினிலே தீவகத்தைச் சேர்ந்த பலரும் இணைந்து கொண்டனர். இச்சான்றோர்களின் பணியினால் பாடசாலைகள் பல உருவாக்கப்பட்டன. மாணவரிடையே நற்போதனைகள் நிகழ்த்தப்பட்டு நன் மாணாக்கர்களை உருவாக்கினார்கள். திண்ணைப் பள்ளிக்கூடங்களி னூடாக செந்தமிழ் வளர்க்கப்பட்டது.

எனினும் கல்வித் தாகம் கொண்ட பல மாணவர்களின் கல்வி நிலையினைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையே காணப்பட்டது. இதனை அறிந்து கொண்ட புங்குடுதீவுச் சைவகலாமன்றம் பெருமனதோடு 1926ம் ஆண்டு "சுப்பிரமணிய வித்தியாலயம்" என்னும் நாமத்துடன் இக்கல்விக் கூடத்தை ஸ்தாபனம் செய்தது. இதன் சேவைக்கும் வளர்ச்சிக்கும் யாழ்ப்பாணம் சைவ வித்தியாபிவிருத்திச் சங்கம் பேருதவி புரிந்து வந்தது. சைவச் சிறார்களின் கல்வியை விருத்தி செய்யும் வகையில் உருவாக்கப்பட்ட இப்பாடசாலையினை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முதல்வராக விளங்கிய திரு.டிரூப் அவர்கள் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் தலைமைப் பொறுப்பினை உயர்திரு. நமசிவாயம் ஆசிரியர் அவர்கள் ஏற்றுக்கொண்டு வழிநடத்தினார். "நமசிவாயம் இருக்க நானிலத்தில் பயமேது" என்பது போல் தலைமையாசிரியரின் வழியில் கல்விப் பணி ஏற்றமிகு பணியானது வித்தியாலயத்தின் வளர்ச்சியோ வெற்றிப் பாதையில் வீறுநடை போட்டது. எடுத்த கருமம் இனிதே வெற்றிபெற விளங்கியது வித்தியாலயம்.

பல அதிபர்கள் தமது அர்ப்பணிப்பான சேவையினை இவ்வித்தியாலயத்திற்கு சமர்ப்பித்தனர். அவர்கள் வரிசையிலே V.J. சின்னையா ஆசிரியர் தலைமையாசிரியராகத் தொடர்ந்து பணியாற்றி வந்தார். இவர் தமது பணிக்காலத்தில் ஆற்றிய சேவை மகத்தானதாகும். 1929ம் ஆண்டினிலே பேராசிரியர் உயர்திரு. சி.இ.சதாசிவம்பிள்ளை அவர்கள் இவ் வித்தியாலயத்தின் தலைமைப் பீடத்தில் அமர்ந்து அரிய பல பணிகளை ஆற்றியமை பெருமைக்குரியதாகும். சைவமும், தமிழும் தழைத்தோங்க மாணவர்களை மாண்புடன் வளர்க்கும் பணியில் இவர் சிறந்து விளங்கினார்.

# எமது பாடசாலை தற்போதைய ஆசிரியர் குழாம்



இடமிருந்து வலம்

இருப்பவர்கள் : திரு.செ.பிரபாகரன், வண.இ.வாசுதேசன், திரு.க.மதிரூபன், திருமதி.த.ரவீந்திரன், திரு.க.ஜீவசீலன், திரு.இ.கார்த்திகேயன்

நிற்போர் : திருமதி.க.கோகுலன், திருமதி.பி. ரவிசங்கரசர்மா, திருமதி.தி.ஸ்ரீகரன், திருமதி.ம.ஸ்ரீதயாளன், செல்வி.நி.நவக்தா, திருமதி.ஜெ.சாந்ததிலீபன், திருமதி.சு.சிவானந்தன், திருமதி.கே.அன்பரசன், செல்வி.இ.கிருசாந்தி

1935ம் வருடத்தில் புரட்டாதி மாதம் இப்பாடசாலை துவிபாஷா பாடசாலையாக மாறியமை குறிப்பிடத்தக்கதாகும். செந்தமிழையும் பொது மொழியாம் ஆங்கிலத்தையும் ஒருங்கே பயிலக் கூடிய ஒரு சிறந்த பாடசாலையாக இது ஒளிர்ந்தது. ஆனாலும் துரதிஷ்ட வசமாக வெகு விரைவிலேயே இந்நிலையானது மாற்றமடைந்தது. எனினும் புங்குடுதீவின் புண்ணியம் போன்று விளங்கிய இப்பகுதியின் முகாமையாளராம் உயர்திரு. வ.பசுபதிப்பிள்ளை அவர்களின் அயராத உழைப்பினாலும், மதிநுட்பத்தினாலும் இப்பாடசாலை ஏற்றம் கண்டது. 1966ம் ஆண்டு வரை எஸ்.எஸ்.சி. வகுப்புள்ள உயர்தரப் பாடசாலையாக இப்பாடசாலை மிளிர்ந்தமை சிறப்பிற்குரியதாகும்.

தலைமையாசியர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்க சேவை புரிந்தவராக திரு.கு.வி. செல்லத்துரை அவர்கள் விளங்குகின்றார். இவர் இப்பாடசாலையின் கட்டிடத்தைச் சிறந்த முறையில் திருத்தியமைத்ததோடு இப்பாடசாலையைப் பெண்கள் கல்லூரியாக மாற்றியமைப்பதற்கும் பெருமுயற்சி எடுத்தார். 01.05.1960 தொடக்கம் 03.05.1964 வரையுள்ள காலப்பகுதியில் இப்பாடசாலை கல்வியில் உன்னத நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.அ.கனகரெத்தினம் ஆசிரியர் அவர்கள் தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் பல மாணவர்கள் சித்திபெறப் பணிபுரிந்தமை போற்றுதற்குரியதாகும்.

புங்கையூரின் திலகமென விளங்கும் கிராஞ்சியம் பதியினிலே முருகப்பெருமான் திருவாயிலின் முன்றிலில் பிரதான வீதிக்கருகாமையில் எழிலுறக் காட்சிகொடுக்க இப்பாடசாலையில் கல்வி பயின்று உயர்நிலை பெற்றோர் அனேகரெனலாம். இங்கு 1973 இலிருந்து 1985வரையான காலப்பகுதியில் திரு.யோ.சா.செல்வராசா அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். இக்காலப் பகுதியின் 1980ம் ஆண்டில் இப்பாடசாலை மகளிர் வித்தியாலயமாக அப்பொழுது கடமையாற்றிக் கொண்டிருந்த கொத்தணி அதிபர் திரு.சி.இராசநாயகம் அவர்களின் அனுசரணையுடன் ஆக்கப்பட்டது. அன்றிலிருந்து யா/ புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய கனிஷ்ட மகாவித்தியாலயம் என்ற பெயரிலேயே யா/ புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம் என்று பாடசாலையின் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது மகளிர் வித்தியாலயமாகத் திகழ்ந்தாலும் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான வகுப்புக்களில் ஆண் பெண் இருபாலரும் கல்வி கற்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது. இக்காலத்தில் பணியாற்றிய அதிபரின் சேவை போற்றுதற்குரியதாகும். இவரது பணியின் பின்னர் திருமதி.மனோன்மணி தனபாலசிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். இவரும் தனது காலப் பகுதியில் ஆற்றிய கல்விப் பணி சிறப்பானதாகும்.

1988ம் ஆண்டிலிருந்து அதிபர் பதவியைச் சிரமேற்கொண்டு செல்வி.மகேஸ்வரி சுப்பிரமணியம் அவர்கள் சிறந்த அதிபராக சட்டத்தின் தலைவியாக வழிநடத்தும் தாயாக சிறந்த சேவையினை மேற்கொண்டார். நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த வேளையிலும் 1991 - 1995 ஒக்டோபர் வரை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விடுதிக் கட்டிடத்திலும், பின்னர் தென்மராட்சி நோக்கிய நகர்வில், 1996இல் யா /வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்திலும் பாடசாலையை இயங்க வைத்த பெருமை இவருக்கேயுரியதாகும்.

தான் எடுத்துக்கொண்ட பணியினைச் சிறப்போடு செய்தது மட்டுமன்றி மீண்டும் 1997ம் ஆண்டு பாடசாலை சொந்தக் கட்டடத்தில் இயங்க வழிசமைத்தார். இடம்பெயர்ந்து இயங்கிய போதும் 1994-1995 காலப் பகுதிகளில் இப்பாடசாலையின் கல்வி நிலை மிக உன்னதமாக இருந்துள்ளது.

செல்வி மகேஸ்வரி சுப்பிரமணியம் அவர்கள் தான் ஓய்வு பெறும் காலத்தில் அதிபர்க்குரிய கீரிடத்தை யாருக்குச் சூட்டுவோம் என எண்ணி ஒழுக்கத்திலும் பண்பிலும் தாயிலும் சிறந்த தாயாளனாகிய திரு. நா. பஞ்சலிங்கம் அவர்களிடம் 1997ம் ஆண்டு கையளித்தார். அது நாள் வரையும் கணித ஆசிரியராக இருந்து பாடசாலை முகாமைத்துவத் திற்கும், மாணவருக்கும் தனது அரும்பணியினை ஆற்றி வந்த திரு.நா. பஞ்சலிங்கம் அதிபர் அவர்கள் அதிபர் எனும் மகுடம் தாங்கி மாணவரின் நலனுக்காய்ச் செய்த சேவைகள் அளப்பரியன. இடம்பெயர்வென்னும் இருள் நிறைந்த பேராறு இழுத்துச் சென்றோர் போக எஞ்சியோர் 1997ம் ஆண்டுக் காலப் பகுதியில் மீண்டு வந்தனர். இப்படியான காலப் பகுதியில் மக்களும் வசதி குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். இச்சூழ்நிலையில் அதிபர் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று மாணவரின் நலனுக்காய்ப் பாடுபட்டமை பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டியவை. திரு. நா. பஞ்சலிங்கம் அதிபர் அவர்கள் தமது காலப் பகுதியில் கல்விப் பணிப்பாளராக விளங்கிய திரு.ப. விக்னேஸ்வரன் அவர்களின் அனுசரணையுடன் தரம் 1, 2 இற்கான அடைக்கப்பட்ட வகுப்பறைகளை அமைத்தார். இவ்வேளையில் பாடசாலையில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையினை கல்விப் பணிப்பாளர் அவர்கள் நிறைவு செய்து பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு உதவியமை குறிப்பிடத்தக்கதாகும். GIZ நிறுவனத்தின் உதவியுடன் தரம் 3, 4, 5 ற்கான அடைக்கப்பட்ட வகுப்பறைகளையும் அமைப்பித்தார். பாடசாலையின் கூரைகள் சலாகை மரங்கள் உக்கிய நிலையில் எப்போ கீழே சரியும் எனக் காணப்பட்டதுடன் வகுப்பறைகளும் குன்றும் குழியுமாக இருந்தன. இவற்றை சேவா லங்கா நிறுவனம், வேலணை பிரதேச செயலக நிதி ஒதுக்கீட்டின் உதவியுடனும் திருத்தியமைத்தார். மாரி காலங்களில் பாடசாலை வளவு பள்ளம் காரணமாக குளமாகக் காட்சியளிக்கும். இதனை நிறைவு செய்யும் வகையில் உலக உணவுத் திட்டத்தின் அனுசனையுடன் மணல் போட்டு சமதரையாக நிரப்பப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைக்கு நிரந்தரமான மைதானமின்றி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியினை மாரியம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள வயல்வெளியில் நடாத்தப்பட்டு வந்தது. இதனால் தளபாடங்களைக் கொண்டு செல்லுதல் மீண்டும் கொண்டு வருதல், பிராதன வீதியைக் கடந்து மாணவர் போக்குவரத்துச் செய்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு பாடசாலை வளவினுள்ளேயே சிறிய அளவிலான மைதானமொன்றை உருவாக்கி அதில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியினை நடாத்தி வெற்றியும் கண்டார்.

GIZ நிறுவனத்தின் அனுசரணையுடன் மலசலகூடம் அமைத்தமை, சேவத சிலறன் நிறுவனத்தின் உதவியுடன் கட்டிடம் புனரமைப்புச் செய்தமை, பாடசாலைக்குத் தேவையான தளபாடங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் அனுசரணையுடன் பெற்றுக் கொண்டமை போன்றனவும் அதிபரினால் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் பிரான்ஸ் மாணவர் ஒன்றியத்தின் உதவியுடன் 2004ம் ஆண்டில் குழாய் நீர் வசதியும், தண்ணீர் தாங்கியும் வழங்கப்பட்டது. சுவிஸ் பழைய மாணவரின் உதவியுடன் பாடசாலையின் கிழக்கு மதில்

கட்டப்பட்டுள்ளது. தற்போது பாடசாலைக்கு மின்சார வசதி, தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்காலிக கணனி அறையும் அமைக்கப்பட்டு கணினிக் கல்வியும் போதிக்கப்படுகின்றது. இவை தமது சேவைக் காலத்தில் அதிபரினால் மேற்கொள்ளப்பட்ட பெருமைமிகு பணிகளாக மிளிர்கின்றன.

அதிபர் அவர்களின் சேவைக்காலத்திலே மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்றதுடன் பல மாணவர்கள் உயர்தரம் கற்றுப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றுள்ளனர். இதற்காக அதிபர் அவர்கள் மாலை நேரங்களில் கணித வகுப்புக்களை நடாத்தி எதுவித வேதனத்தையும் எதிர்பார்க்காது செயற்பட்டமை பாராட்டப்பட வேண்டியதாகும். இன்னும் பல மாணவர்கள் உத்தியோகம் பார்க்கின்றனர். தரம் 5 ற்கான புலமைப்பரிசில் பரீட்சையிலும் பல மாணவர்கள் சித்திபெற்று யாழ்ப்பாணம் சென்று கல்வி கற்று வருகின்றனர். சிலர் இப்பாடசாலையிலேயே தமது கல்வியைத் தொடர்ந்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் உன்னதமான சித்தியைப் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளனர். தமிழ்த் தினப்போட்டிகளில் மீனவ நடனம் 3ம் இடத்தினையும், பா ஓதல் 2ம் இடத்தினையும் மாவட்ட மட்டத்தில் பெற்றுக் கொண்டமை பெரும் பதிவாகப் பரிணமிக்கின்றது. செம்பு நடனமும் மாவட்டப் போட்டியில் கலந்து கொண்டமை சிறப்புக்குரியதாகின்றது. வலைப்பந்தாட்டத்தில் வலய சம்பியனாக இப்பாடசாலை மாணவர்கள் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும். சிங்களப் போட்டியிலே தேசிய மட்டத்தில் இப்பாடசாலை மாணவர் 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை பெருமைக்குரிய விடயமாக காணப்படுகின்றது. இவ்வாறு மாணவர்களின் சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இருப்பினும் இடப் பெயர்வின் பின்னர் கல்வி நிலையில், கல்வி அறிவு நிலையில் வீழ்ச்சியடைந்து காணப்பட்ட மாணவ சமூகத்தைக் கொண்டு அதிபர் அவர்கள் தமது பெரு முயற்சியினால் படைத்த சாதனைகளே இவையென்றால் அது மிகையாகாது. தமது பணிக் காலத்திலே "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்ற பெரியார் கூற்றிற்கிணங்கவும் "அன்ன சத்திரம் ஆயிரம் வைப்பினும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்ணியம் கோடி புண்ணியம்" என்ற பாரதியாரின் வாக்கிற்கிணங்கவும், தன்னலம் கருதாது திரு.நா. பஞ்சலிங்கம் அதிபர் அவர்கள் தமது ஓய்விற்கான அகவை நிறைவெய்தி மணிவிழாக் காணும் வரையிலும் ஆற்றிய பணிகள் யாவும் போற்றுதற்குரியவை.

**ஓய்வு நிலை அதிபர்கள்**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.**

# வாழிய எம் வித்தியாலயம்

தாய்மடியும்
தாலாட்டு பாட்டும்
மண்சோறு கறி சமைத்து
மகிழ்ந்துண்ட பொழுதுகளும்
பூரித்த புன்னகையும்
புதுப்பொலிவு மென
கவலையின்றி
திளைத்திருந்த
சிறு வயதின் பின்னர்
மீண்டும் ஓர் தாய் மடியாய்....
பிள்ளைகளை அரவணைத்து
அன்பூட்டி, அறமுரைத்து
அறிவியற் சுடரேற்றி
கல்வி கலைகளோடு
வாழ்வியலும் புகட்டி
திக்கெட்டும்
அறியாமை இருள் அகற்றி
ஒளி பரப்பம்
பாடசாலைத் தாயை
பணிவுடனே வணங்குகின்றோம்!
அகவைபல தாண்டி
நூற்றாண்டில் நிமிர்ந்து நின்று
ஆலமரம் போல் வேர் விட்டு
விழுதெறிந்து
திசையெட்டு புகழ் பூத்து
மணம் பரப்பும்
எங்கள் சுப்பிரமணிய
வித்தியாலயம்.....
அறிஞரை, ஆசானை
ஆளுமை மிக்குடையோரை
துறைசார்ந்த நிபுணர்களை
கலைஞர்களை
என்றென்றும் உருவாக்கி
மங்காத புகழோடு
நாளெல்லாம் ஒளி வீசி
வளர்இளம் மதியெனவே
என்றென்றும் வாழியவே.

செல்வி ஜெ.லுஜின்சியா
தரம் 07

## எமது பாடசாலை தற்போதைய மாணவ முதல்வர்கள்



இடமிருந்து வலம்

இருப்பவர்கள் : உபசிரேஷ்ட மாணவ தலைவி செல்வி.ந.தேனுஜா, ஆசிரியர் திருமதி.ரவீந்திரன், அதிபர் திரு.ந.பஞ்சலிங்கம், ஆசிரியர் திருமதி.கே.அன்பரசன், சிரேஷ்ட மாணவத் தலைவி செல்வி.ம.மதுஷாலினி, பா.லக்சனா.

நிற்போர் : செல்வி. கோ.ரவிநிலா, செல்வி.சி.தானுகா, செல்வி.சூ.வஜீக்கா, செல்வி.ச.மைதிலி, செல்வி.அ.மேரிடாசனா, செல்வி.ந.லக்ஷிகா, செல்வி.சி.கிருத்திகா, செல்வி.ச.கீர்த்தனா, செல்வி.ச.நிவேதிகா, செல்வி. அ.சபிதா,



**2015ஆம் ஆண்டு மாணவ முதல்வர்கள்**

# சுதந்திரத்திற்காக ஏங்குதல்

விழிகள் தேடும் சுதந்திரம்
காட்சி ஆக வேண்டும்
செவிகள் தேடும் சுதந்திரம் இனிய
ஓசை ஆக வேண்டும்

மனங்கள் தேடும் சுதந்திரம் இன்று
எம் மண்ணில் மலர வேணும்
மரணங்கள் மலிந்து சுடுகாடாகிய
யுத்தத்தின் பின்னும் இல்லையே சுதந்திரம்

கண்போன போக்கே வாழ்வு
கலக்கம் கொண்டால் இன்று
மனதில் நிம்மதி இல்லை
வாழ்வில் அமைதி இல்லை
தவித்தான் மனிதன் இன்று

மனித நேய அன்பு உண்டு - அதை
எண்ணிப் பார்க்க மறந்தேன்
நிம்மதி எங்கே இன்று
மதுவே சொர்க்கம் என்று
வாழ்வு மடிய துடிக்கிறான் மனிதன்

**செல்வி பா.லக்சனா**
**தரம் 10**

# அம்மா எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் நான் உன்னை எப்போது காண்பேன் அம்மா

தெய்வத்திற்கு சமனாய் - உன்னைத தவிர
யாரையும் ஒப்பிடாது
பொய்கள் நிறைந்த - இவ்வுலகில்
நான் கண்ட என் உயிர் அம்மாவே

கர்ப்பத்தில் உன் கருவறையில் அடைக்கலம்
கொடுத்து எம்மைப் பெற்றெடுத்து
மண்ணுலகத்தை விட்டு விண்ணுலகம் சென்றவரோ
நான் படும் வேதனைகளை அறியாய் அம்மா

அம்மா என்று ஆசையாய் அழைத்த எம்மை
இவ்வுலகில் விட்டுச் சென்றவளே
அடுத்தவொரு ஜென்மமுன்னு -இருந்தா
நீ என் பிள்ளையா பிறக்கணும்

பூமிக்கு ஒளிவீசும் சூரியன் போல - நிற்காமல்
கொட்டுகின்ற நீர்வீழ்ச்சி போல
மண்மீது விழுகின்ற மழைச் சாரல் போல
எதிர்பார்ப்புகள் ஏதும் இல்லாமல் - எப்போதும்
அன்பு சுரக்கின்ற சொந்தம் அம்மா மட்டுமே

எமக்கு சிறுவயதில் கல்வி கற்பித்து
பல நல்ல அறிவுரைகளைக் கூறி
சீர் கெட்ட இவ்வுலகத்திலே - எப்படி
வாழ வேண்டும் என்று கற்றுத்தந்தாய் அன்னையே

தமிழ் உயிரெழுத்தின் முதல் “அ” எழுத்தின்
பொருள் நீ தானே அம்மா - நான்
கல்வியில் பெரியவளாய் உனது கனவை
நிறைவேற்றுவேன். இது சபதம்

நன்றி

**செல்வி ம.மதுசாளினி**
**தரம் 8**

# அனுபவமே நல்ல ஆசான்

இந்தக் காலத்தில் படிப்பறிவை விட பட்டறிவே அனைவருக்கும் தேவையாக இருக்கின்றது. பட்டறிவால் பாதித்தவர்கள் தங்களின் தவறை உணர்ந்து மீண்டும் அந்தத் தவறு நிகழாமல் தங்களைத் திருத்திக்கொள்கிறார்கள். சிலர் வாழ்க்கை அனுபவத்தின் மூலம் தாங்கள் கற்ற நன்மையும், தீமைகளையும் மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க தவறுவதால் அனுபவமற்றவர்கள் தவறுகளைச் செய்கின்றார்கள்.

அனுபமே நல்ல ஆசான் நாளுக்கு நாள் நாம் வளர வளர நாம் பெறும் அனுபவத்தின் மூலம் வாழ்க்கை நமக்கு பல பாடங்களைச் சொல்லித் தருகின்றது. குழந்தைப் பருவம் முதல் இறப்பு வரை இயற்கையாகவே நாம் பல பாடங்களைக் கற்கிறோம். அந்தப் பாடங்களைக் கற்கும்போது நாம் தவறு செய்தால், அந்தப் பாடம் நமக்கு மீண்டும் போதிக்கப்படுகின்றது. மனித உடலில் '60 மில்லியன்' திசுக்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு திசுவும் நம் உடம்பு குறித்த அனைத்து விவரங்களையும் தெரிந்து வைத்துக் கொண்டுள்ளது. ஒவ்வொரு விநாடியும் பல திசுக்கள் மடிந்து பல புதிய திசுக்கள் தோன்றுகின்றன. ஒரு திசு மறையும் போது, அந்தத் திசு அந்த உடம்பு குறித்த தனக்கு தெரிந்த அனைத்து விபரங்களையும் புதிதாக தோன்றும் திசுவுக்கு பரிமாற்றம் செய்து விட்டுதான் மறைகிறது. ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை மனித உடம்பு தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்கிறது. அதாவது ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நம் உடம்பின் அதே நிலை இப்போது இல்லை. நம் உடம்பு ஒவ்வொரு ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை தன்னைத் தானே சுத்தரிகரித்துக் கொள்கிறது.

இதே நிலை தான் நம் மனதிற்கும் வாழ்க்கை நாளும் நமக்கு பல பாடங்களைப் போதிக்கிறது. ஆனால் நாம் அப்போதைக்கு அதை உணர்ந்து மனதில் உறுதி எடுத்துக் கொண்டாலும் பின்னாளில் மறந்து விடுகின்றோம். அனுபவத்தின் மூலம் பெறும் அறிவு என்றும் நம் நினைவை விட்டு அகலாது. அனுபவ அறிவைப் பெற்றவர்கள் எந்த கடினமான சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளக் கூடியவர்களாகவும் விளங்குவார்கள்.

எனவே, நமது அனுபவத்தையும், நாம் செய்த செயலின் மூலம் அடைந்த சாதக, பாதகங்களையும் மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். அதேபோல் அனுபவத்தின் மூலம் பல விடயங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**செல்வி சி.கிருத்திகா**
**தரம் 11**

# அன்புடன் எம்மை பாதுகாத்திடுங்கள்

இந்தப் பாரினிலே - பாவைகளாய்
தோன்றிய பாவிகள் நாம்
எத்தனை சோதனைகள் எத்தனை
வேதனைகள் எம்மனதில்
சிறுமனதில் பார உணர்வுகள்
ஏக்க நினைவுகள்
அத்தனையும் இன்றி அன்புடன் எம்மை
பாது காத்திடுகள்

கல்வி கற்கும் வயதிலே - கற்புக்
கரையும் நிலையிலே
கண்ணகியாக வாழ முடியாத பாரினிலே
ஏங்குகின்றோம் நிலையிலே
கற்க முடியாத நிலமை
அத்தனையும் இன்றி அன்புடன்
எம்மை பாதுகாத்திடுங்கள்

பால் மணம் மாறாத பிஞ்சு வயதிலே
பாழ் கிடங்கில் எறிகின்றனர்
சுற்றத்தாரையும் இனத்தாரையும்
நம்ப முடியாத காலம்
பாதுகாக்க வேண்டிய நீங்களே - எங்களை
பாழாக்குறீர்களே! எங்கே
அன்புடன் எம்மைப் பாதுகாத்திடுங்கள்

கொஞ்சிக் குலாவும் குழந்தைகள் - நாம்
கொஞ்சம் வாழ விடுங்கள்
கெஞ்சிக் கேட்கின்றோம் நாம்
அப்பா தெரியாத குழந்தைகள் பலர்
யார்? அப்பா பெயர் என்ன? எங்கே
என்று கேட்டாலும் பதில் கூறமுடியாது
தாய்க்கு இது நாம் செய்த பழியா?
அல்லது தாய் செய்த பழியா?

பற்றையில் குற்றுயிராகவும் சடலமாகவும்
கிடக்கும் பிள்ளைகள் பலர் - காலம்
எங்கே எமக்கு காலம் செய்த கோலமோ?
ஏன் இந்த வேலை குழந்தைகள் நாம்
கெஞ்சிக் கேட்கின்றோம் எம்மை
அன்புடன் பாது காத்திடுங்கள்.

செல்வி .பி.டிலானா
தரம் 9



எமது பாடசாலை இடைநிலை மாணவர்கள்



எமது பாடசாலை ஆரம்ப கல்வி மாணவர்கள்

## பாடசாலை

பண்பாக பலவிதமாக
மாணவர்களுக்கு அன்பாக
அரவணைக்கும் எமது பள்ளியே
நல்ல அறிவுரைகளை
ஊட்டித் தரும் ஆசான்களே
எல்லாத் துறைகளிலும்
முன்னேற்ற மடையச் செய்து
நாட்டில் நல்ல பிரஜையாகவும்
வாழ்க்கையில் ஒரு உத்தமனாகவும்
உண்மைகள் பேசுவாராகவும்
எம்மை பணிவாக நடக்கச்
செய்த எம் பள்ளியே

**கா.உஷாணி**

## மனித நேயம்

அன்பு என்னும் மூன்றெழுத்தால் பிணைந்து
வன்பு என்னும் மூன்றெழுத்தைக் களைத்து
பண்பு என்னும் மூன்றெழுத்தை வளர்த்து
பாரினிலே அவதரித்த புண்ணியர் நாம்
புத்தி ஜீவிகளாய் பார் போற்றும் பாலகனாய்
வாழ்ந்து புறாவிற்கு தன்னுயிர் ஈந்த சிபி போல
உலக ஜீவராசிகள் அனைத்துக்கும்
நேரச்கரம் நீட்டுவோம்.

**செல்வி பி.டிலக்ஷி**
**தரம் 07**

# எனது பாடசாலை

சப்த தீவுக் கூட்டங்களில் ஒன்றான பொன் கொடு தீவாம் புங்குடுதீவில் பெண்களுக்கென ஒரு பாடசாலையாக விளங்குவது யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.

இப்பாடசாலையின் ஆரம்பம் பற்றி நோக்குவோமானால் ஆரம்ப காலத்தில் சைவ மக்கள் கல்வி கற்க முடியாத சூழல் காணப்பட்டது. அவர்கள் கல்வி கற்று முன்னேற வேண்டுமென இந்து போட் சு.இராசரெத்தினம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட எண்ணற்ற பாடசாலைகளில் எனது பாடசாலையும் ஒன்றாகும்.

ஆரம்ப காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்றனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வி மான்களை உருவாக்கிய பெருமை எனது பாடசாலைக்குண்டு.

தற்போதும் பல மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். தற்போது திரு.நா.பஞ்சலிங்கம் அவர்கள் இருபது வருடங்களுக்கு மேலாக எமது பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் பணியாற்றி வருகின்றார். இப்போதும் எமது பாடசாலையில் பல கல்விமான்கள் உருவாகிக் கொண்டே தான் இருக்கிறார்கள். ஆசிரியர்களும் தூர இடங்களில் இருந்து வந்தாலும் மாணவர்களின் வளர்ச்சிக்காகவே அயராது பாடுபடுகின்றனர்.

தற்போது எமது பாடசாலையின் சாதனைகளின் நூல் வெளியீட்டு விழாவும் கொண்டாட இருக்கிறார்கள். எனது பாடசாலை இது போன்ற பல வருடங்கள் நிலைத்து நின்று பல கல்விமான்களை உருவாக்க வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

**செல்வன் அ.ஜினோஜன்**
**தரம் 5**

# அம்மா

பத்து மாதம் சுமைகளைத் தாங்கி
உன் கருவறையில் சிறை வைத்தாய்
மண்ணுலகத்தை விட்டு விண்ணுலகம்
சென்றவளே - நான்
படும் வேதனைகளை உன்னால்
எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்

பிள்ளைத் தமிழ் சொல்லித் தந்து
பாடசாலைக்கு - நீ
செல்ல வைத்தாய்
கள்ளமில்லா பிள்ளை மனம்
வேண்டும் என்று கற்றுத் தந்தாய்
கடல் போல் அன்பைக் காட்டி
கண்ணியமாய் என்னைக் காத்தாய்
சீர்கெட்ட உலகத்திலே
சிரித்து வாழ வேண்டும் - என்று
சொல்லித் தந்தாய்

எம் தாயைப் பிரிந்து
ஆதரவிழந்திருக்கும்
எமக்கு கல்வி ஒன்றே
பெரிய ஆயுதம்

அன்பின் இலக்கணமாய்த் திகழ்ந்தவளே
நின்னாசை நிறைவேற்றி
சொர்க்கத்தை பூமியிலே கண்டு
கல்வியிற் பெரியவளாய்
நன்றே வாழ்வேன்
இது சபதம்

**செல்வி ம.மதுஷாயினி**
**க.பொ.த (சா/த)**

## வாழ்க உம் பணி

புங்கை மாநகரில் பிறந்து
புன்னகை தவழ வளர்ந்து
கல்வியின் பால் உயாந்து - எமக்கு
கல்வி அறிவு புகட்ட வந்தவரே!
உம்முடைய செயல்கள் எல்லாம்
எம் இதயத்தில் இன்னும் குடியிருக்கிறது....

உம் வாழ்வின் இலட்சியத்தை
உண்மையிலே நாம் கூற
எம் அறிவு போதாது - துணைவேந்தரே!
எழுதி முடிப்பதற்கும் எழுத்தாணி கூர் மழுங்கும்
எம் அவனியிலே உயர்த்துவதற்கு
அன்பும், பணிவுமாய் பணி செய்தவரே!
எங்கள் குருநாதனாய் எமக்கு ஒளி ஊட்டி
எம்மை வழி நடத்திய அதிபரே!
வாழ்க உம் சேவை.... வாழ்க உம் குலம்....

**செல்வி கோ.ரவிநிலா**
**தரம் 11**

## பாடசாலை

பாடசாலை பாடசாலை
நாம் கல்வி கற்கும் பாடசாலை
நம்மை நல் வழிப்படுத்தும் பாடசாலை
ஆலயம் போன்றது எம் பாடசாலை
ஆனந்தமானது எம் பாடசாலை
தெய்வம் வாழும் எம் பாடசாலை
பேதையை மேதையாக்கி
கோழையை வல்லவனாக்கி
ஏழையை பணக்காரனாக்கி
குருடனை வழிகாட்டியாக்கி
பேச முடியாதவனை பேசப் பண்ணி
முடியாதென்பனை முடியுமெனத் தட்டி
யெழுப்பி கற்க வைக்கும் எம் பாடசாலை
முடியுமா? முடியுமா? உயிர் உள்ள மட்டும்
எம் பாடசாலையை மறக்க முடியுமா?
நாம் மட்டுமல்ல நமது தலைமுறை
தலைமுறையாக தலை வணங்கி
நிற்போமே எமது பாடசாலையை.

**செல்வன் A. ரேனுஜன், தரம் 4**

# ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற வள்ளுவர் வாக்கு. கூறுவது யாதெனில் ஒழுக்கம் என்று கூறப்படும் ஐந்தெழுத்துச் சொல்லானது ஒரு மனிதனுக்குள்ள அரும்பெரும் சொத்தாக விளங்குகின்ற உயிருக்கு சமனாக மதிக்கப்படும் என இரு வரிகளின் மூலம் இவ்வுலகிற்கே விளக்கி கூறுகின்றார்.

அதாவது, ஒழுக்கம் என்றால் நாம் நல்ல மனிதர் என்று கூறிக்கொண்டு திரிவதனால் அது கிடைக்கப் போவதில்லை. அது எமது உடலிலிருந்து மட்டுமன்றி உள்ளமும் தூய்மையாக இருக்க வேண்டும். மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களையும் அஹிம்சை முறையில் ஆட்கொள்ளல் வேண்டும். அதன் வழியே அன்பு, நேர்மை, தூய்மை, ஆன்மபலம், கருணை, பணிவு, தன்னம்பிக்கை, மனத்தூய்மை என்பவற்றை எம்முடனே வளர்த்துக் கொள்ளல் வேண்டும். ஆனால் சுயநலம், அடங்காமை, பஞ்சமா பாதகங்களான, "கொலை, கொள்ளை, புலாலுண்ணல், பொய், காமம்" ஆகிய செயற்பாடுகளை சென்ற பாதையிலேயே விட்டுச் செல்லல் வேண்டும்.

இதனாலேயே தான் சிறந்த ஒழுக்கம் எம் ஆயுள் வரை நம் பாதையிலேயே தொடர்ந்து செல்லும். "வாழையடி வாழையாய்..." எமது இனத்தையே வாழ வைக்கும். இவ்வொழுக்கம் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று கூறப்படுவதும் இவ் வொழுக்கம் என்பதாலேயே ஆகும். ஏனெனில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் என்ற வரிகளினூடாகக் கூறப்படுவது இவ்வுலகிலே ஒழுக்கத்துடன் வாழ்பவன், இறைவனுக்கு பக்கத்தில் இருத்தப்படுவான் என உயர்வு நவிற்சியாகக் கூறப்படுகின்றது.

ஆகவே இதனூடாக எமக்கு மனதில் ஆளப்பதிய வேண்டியது. ஒழுக்கத்துடன் வாழ வேண்டும் என்ற மகா சிந்தனையே ஆகும். வள்ளுவர் மட்டுமன்றி பாரதியார் சி.வை.தாமோ தரம்பிள்ளை, கவிஞர் கண்ணதாஸன் போன்ற பல பெரியார்களுமே ஒழுக்கத்தையே மேலாக கருதி கூறுகின்றனர். அதாவது,

" எண்ணி முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்" என பரிந்துரைக்கின்றார் பாரதியார்.

இதேபோல் "ஒழுக்கமற்ற மனிதன் சுடுகாட்டுக்கு சமனாகின்றான்". இதன் மூலம் ஒழுக்கம் கெட்ட மனிதனையும் உலகம் போற்றும் மனிதனாக வாழ வைக்கும். எனவே, எந்தச் செயலை செய்யும் போதும் ஒழுக்கத்துடன் செயற்பட்டால் வெற்றியும் நலமும் உண்டாகும்.

**செல்வி ஜெ.லுஜின்சியா**
**தரம் 7**

*சுயசரிதை*

# "நான் ஓர் ஓட்டைப் பானை"

நான் இப்பொழுது ஓர் ஓட்டைப்பானை. என் அடி வயிற்றிலே கொட்டைப் பாக்களவு துவாரத்துடனும் சில வெடிப்புக்களுடனும் குற்றியிராய் இருக்கிறேன். நல்லைக்குமரன் வீட்டுக் கோடிப் புறத்தில் குப்புறக் கிடக்கிறேன். பொன்னின் குடம் உடைந்தால் இந்நிலை உண்டாகுமா? அது மீண்டும் பொன்னாகிவிடும். நான் மண்ணின் குடந்தானே? இந்நிலையில் இருக்கின்றேன். சில நாட்களுக்கு முன்னரே என் நிலை வேறு. நல்லைக் குமரன் மனைவியின் அன்புக்கும் ஆதரவுக்குரிய நல்லதொரு பானையாய் விளங்கினேன். இன்றோ குற்றுயிராய்க் கிடக்கும் என் மனத்திரையிலே கடந்த காலச் சம்பவங்கள் வண்ண வண்ணப்படங்களாக விரிகின்றன.

இருபாலை என்னும் ஊரிலே மட்பாண்டக் கலைஞன் ஒருவன் இருந்தான். அவன் வீட்டுக்கு முன்றிலே பலவகைப்பட்ட களிமண் குவிக்கப்பட்டுள்ளன. ஒருநாள் அக்களிமண் வகைகளைக் குறிப்பிட்டதொரு விகிதத்திற் கலந்தான். சிறுகற்கள், வேர்கள், தும்புகள் முதலியனவற்றை ஒன்றும் விடாமற் பொறுக்கித் தூய்மைப்படுத்தினான். பின்னர் அளவாக நீர் விட்டுக் குழைத்தான்; குழைத்த மண்ணை நன்றாக மிதித்தான். ஒன்று திரண்டு பசைபோலாகும் வரை மிதித்தான். அம் மண்ணைக் குன்றுபோலச் சிறு குவியலாக்கிச் சாக்குகளால் மூடி விட்டான் மாப்புளித்தால் அப்பத்துக்கு நல்லது. மண் புளித்தால் மண்பாண்டத் துக்கு நல்லது போலும். இரண்டு நாள் கழிந்தன. அம்மண்ணைத் திரளைகளாக்கினான். வண்டிச் சக்கரம் போன்ற அமைப்புடைய திரிகை என்னும் கருவியை எடுத்தான். அத் திரிகையும் அவன் கைகளுமே மட்பாண்டங்களை உருவாக்கும் பொறிகள் உருட்டிய மண் திரளைச் சக்கரத்தின் நடுவில் வைத்தான். சக்கரத்தைக் கைகளால் சுழற்றி விட்டான். அது 'கிர் கிர்' என விரைவாகச் சுற்றிக் கொண்டிருந்தது. அவன் கைகள் இரண்டும் விரைவாக வேலை செய்யத் தொடங்கியது. என்ன ஆச்சரியம்! சில நிமிடங்களிலே பிறப்பெடுத்தேன். என்னைப் போலவே பல பானைகள் உருவாக்கினான். என்னோடு பல சகோதரங்கள் தோன்றினர். எங்களைக் காற்றிலே தக்கபருவம் அடையும் வரை உலரவிட்டான்.

என்னை மடி மீது கிடத்தினான். மரத்திலான இரு கருவிகளை எடுத்துக் கொண்டான். என்னுடலை அழுத்திப் பிடித்துக் கொண்டு மற்றைய கருவியால் மெல்ல மெல்ல தட்டினான். சிறு குழந்தைக்கு எண்ணெய் பூசி, தாய் அதன் அங்கங்களைப் பிடித்து விடுவதுபோல அவன் செயல் காணப்பட்டது. அடுத்தது நாங்கள் எல்லோரும் அக்கினிப் பரீட்சைக்கு ஆயத்தமானோம். எங்கள் எல்லோரையும் சூளையிலேற்றி நெருப்பு மூட்டி வேகவிட்டான். பொன்னை நெருப்பிலிட்டு உருக்க உருக்க அது மேலும் மேலும் ஒளி பெறுமாம்; அது போலவே நாங்களும் நெருப்பிற் கிடந்து வெந்து துன்புற்று உறுதி கொண்ட உடம்பினரானோம்.

உழவர் திருநாளான தைப்பொங்கல் அண்மித்து, என்னையும் என் தோழர்களையும் வண்டியொன்றில் அவதானமாக ஏற்றி சந்தைக்கு கொண்டு சென்றான். சந்தையை அடைந்ததும் அவன் எங்களை இறக்கி வரிசையாக அடுக்கினான். எங்கள் வயிற்றில் வெண் கட்டியால் எங்களுக்குரிய பெறுமதியினைக் குறித்தான். சந்தையில் கடல் போல் மக்கள் கூட்டம்

அலைமோதியது. நாங்கள் சந்தைக் காட்சியைக் இரசித்துக் கொண்டிருந்தபோது ஒரு பெண் நாங்கள் இருக்கும் பகுதிக்கு வந்தாள். அவள் தான் நல்லைக்குமரனின் மனைவி. அவள் சிறிது நேரம் எங்கள் எல்லோரையும் உற்றுப்பார்த்தான். பின்னர் என்னைத்தான் முதலில் எடுத்தாள் அவள் என்னைப் தட்டிப்பார்த்தாள். சுண்டிப் பார்த்தாள். உருட்டிப் பார்த்தாள். என்னை பணங்கொடுத்து வாங்கிச் சென்றாள். தைப்பொங்கலன்று அதிகாலை நல்லைக் குமரனின் வீட்டிலே தூய்மையும் அழகும் பொலிந்தன. முற்றத்திலே வண்ணக்கோலம் கண்ணைக் கவர்ந்தது. இரு பக்கமும் குத்துவிளக்கேற்றினர். சாணத்திலான விநாயகப் பெருமான் எழுந்தருளியிருந்தார். நல்லைக்குமரன் என்னை நீராட்டி அலங்கரித்தான் எனது வாயினிலே மஞ்சள் இலை, இஞ்சி இலை, மாவவிலை என்பவற்றைக் கட்டினான். நீரையும் பாலையும் கலந்து நிரப்பினான். கற்பூர தீப மேற்றப்பட்டது. மங்கள காரியம் இனிதே நிறைவேறியது. சிறுவர் பட்டாசு சுட்டு மகிழ்ந்தனர். அதனால் மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தேன். நல்லைக் குமரனின் மனைவி என்னைச் சுத்தம் செய்து மூலையிற் கவிழ்த்து வைத்தாள். சில நாட்கள் ஓய்வெடுத்தேன்.

அரிவி வெட்டிற்கு தொழிலாளர் நல்லைக்குமரனின் செந்நெற் கழனியில் அரிவி வெட்டினர். பலருக்குச் சோறு சமைக்க வேண்டியிருந்ததால் நல்லைக்குமரனின் மனைவி என்னை எடுத்தாள். நல்லைக் குமரனின் வீட்டில் மகிழ்ச்சிகரதான நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. நல்லைக் குமரனின் மனைவி ஒரு ஆண் குழந்தையை நீராட்டுவதற்கும் வெந்நீர் பாத்திரமானேன். குழந்தையின் தாய் நீராட்டும் வேளையிலே அக்குழந்தையின் பொலிவைப் போற்றுவேன்.

**செல்வி அ.சுபிதா**
**தரம் 10**

# பூச்செண்டிலே பூத்த பூக்களாய் வாழ்த்துகின்றோம்

பொங்கி வழியும் இதயத்திலிருந்து
ஓர் அன்பு நெஞ்சத்துக்கு
அன்புக் குழந்தைகளாகிய
செல்வங்களின் வந்தனாங்களும் வாழ்த்துக்களும்

சின்னஞ் சிறு மழலைகள் சின்னவங்க
சிற்றாறு போன்று எம்மை காட்டாறாக்க
சின்னஞ் சிட்டுக்களாக வலம் வந்த எம்மை
சிறகின் மறைவினிலே வைத்து

வானத்தைப் போல
வாழ்க்கையிது என்றுணர்த்தி பாலை மணல் உள்ளத்தை
விதை நிலமாக மாற்றி கல்வியை
விதைத்து அறுவடை அநேகம்

மண்ணுக்கள் மறைக்கப்பட்ட வேர்
விருட்சத்தை தாங்கி நிற்பது போல
அன்பும் அரவணைப்பும்
உண்மையும் உத்தமும் கொண்டு

குன்றாத குறிக்கோளை சுமந்து
எத்தனையோ மாணிக்கங்களை
பிரகாசிக்க வைத்தவரே உம்மை

ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர்
வித்தியாலயம் என்ற பூச் செண்டிலே
பூத்த பூக்களாய் தலை தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

**செல்வி ப.ஜனுஷா**
**தரம் 6**

# அன்புள்ள அம்மா

ஈரைந்து மாதங்கள் கருவிலே என்னைச் சுமக்க
இரவாய்பகலாய் கண்விழித்தாயே
வலியெல்லாம் பொறுத்தே நீ
வயிற்றிலே சுமந்தாயே

புரண்டு படுத்தால் பிள்ளை எனக்கு
வலிக்கு மென் றெண்ணி
உன் தூக்கம் தொலைத்தே - என்னை
கருவிலே காத்தவளே

பிள்ளை நான் பிறக்கும் முன்னே
புராணங்கள் படிப்பாலே
என் பிள்ளை நல்லவனாய்
நாட்டை ஆள்பவனாய்
நாளை இத் தரணியிலே
புகழ் சேர்க்க வருவானென்று
கனவெல்லாம் கண்டவளே

பிள்ளை நான் பிறந்த பின்னே
பாலூட்டி சோறூட்டி
அழகழகாய் உடையுடுத்தி
அனுப்பி வைத்தாய் பாடசாலை

பள்ளி முடிந்து
துள்ளி நான் வருகையிலே
உன் கையால் செய்து வைத்த
இனிப்புப் பண்டங்களை
இஷ்டமுடன் தந்தையே
இப்பவும் நினைக்கயிலே

உமிழ் நீர் சுரக்குதம்மா
ஆயிரம் கதைபேசி
அழகழகாய் பாட்டிசைத்து
அழுதிடும் எனக்கோ
அன்ன மூட்டுவாயம்மா
அழகோ இது தனியழகு

பரீட்சையிலே நான் தோற்றுப்போக
பக்குவமாய் எடுத்துரைத்து
மறுபடியும் முடியுமென
மனதைரியம் ஊட்டியவளே
நோய் வந்து நான் படுக்கையிலே
நொடிக்கொரு தடவை கண்ணீர் வடித்தவளே

உன் பாசம் நான் சொல்ல
வார்த்தை யொன்றும் இல்லையம்மா

வேலைக்கு நான் சென்று
வாங்கி வந்தேன் கையில் சேலை
வேலையும் உள்ளதம்மா - சமூகத்தில்
புகழ்மாலையும் உள்ளதம்மா
சேலை உடுத்த நீயோ - இப்போ
சுவரிலே படமாய் உள்ளாயம்மா

தாயே பிறந்திட ஆசை
மீண்டும் உன் சேயாய் அல்ல
நீ என் மகளாய்
நான் கல்லறை செல்ல முன் - நீ
என் கருவறை வருவாய் என
காத்திருக்கிறேன் - என்
அன்புள்ள அம்மாவே!
என் உயிரே!

**செல்வி சூரியயாகன் வஜீக்கா**
**தரம் 11**

# தமிழின் பெருமை

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ்! குமரி முதல் இமயம் வரையாக முடிகொண்டு வாழ்ந்த முத்தமிழ்! தன்னிகரற்ற காவியங்கள் பலவற்றைத் தன்னா பரணமாக் பூண்ட தமிழ்! ஆம்! செந்தமிழ்ப் பெருமை சொற்களுள் அடங்காது எனினும் இமயத்தின் பெருமைச் சிறுகல் செப்புவது போல, சில கருத்துக்களைச் சொல்ல நினைக்கின்றேன்.

ஆதி மனிதன், மொழி புரியாது, வழி தெரியாது தவித்தான். நாங்கள் நகரப் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தொடங்கினான். சமிக்ஞைகள் வளர்ந்து சொற்களாகின. பல்வேறு மொழிகள் பிறந்தன. மொழிக்கேற்ப நாகரிங்கள் உருவாகின. நாகரிக மேம்பாட்டின் அடிப்படை "மொழிப் பயன்பாடு" என்பது அனைவரும் அறிந்ததே. திராவிடக் கூட்டத்தின் தனித்துவ முன்னேற்றத்திற்கும் காலாகத் தமிழ் மொழியே விளங்கியது.

ஹிந்தியும், ஆங்கிலமும், சிங்களமும், பிரெஞ்சும், ஜேர்மனும் எனப் பலமொழிகள் தற்போது பாவனையிலுள்ளன. முன்னைய காலத்து மொழிகள் பல இப்போது பேச்சு வழக்கில் மட்டுமேயுள்ளன. சில எழுத்து வழக்கில் மட்டும் உள்ளன. வேறு சிலதோ காலச் சுழற்சியில் கரைந்து, பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் இல்லாது ஒழிந்து போய்விட்டன. சில மொழிகள் மிக சொற்ப எண்ணிக்கையிலேயே தான் பேசப்படுகின்றன. ஆனால் தொன்மைத் தமிழ் மொழியோ இன்றுவரை எழுத்து, பேச்சு ஆகிய இரு வடிவத்திலுமுள்ளது. கூடவே மிகப் பரவலாக உலகெங்கும் பேசப்படும் மொழியாகவும் திகழ்கின்றது.

தமிழ் மொழியானது 247 தனி எழுத்துக்களைத் தன்னகத்தே கொண்டது. இவற்றில் தமிழுக்குச் சூட்டிய அழகுக் கிரீடமாக "ழ" கரம் விளங்குகின்றது. மலையாளம் தவிர்ந்த வேறெந்த மொழியிலும் இது காணப்படவில்லை. தமிழில் "ழ", "ள", "ல" வேறுபாடுகள் இசையொலியில் இனிமை பரப்புவன. தமிழின் இனிமையும் மென்மையும் தன்னிகரற்றன. மொழிச் சிறப்பின் தாக்கத்தை அந்தந்த மொழிகளின் இசைக் கோலங்களில் காணலாம். மேலைத்தேய இசைகளில் இல்லாத ஓர் அமைதியான, அற்புதமான நிறைவை தமிழ்ப் பாடல்களைக் கேட்கின்றபோது உணரலாம். இதனால் தான் "தமிழுக்கு அமுதென்று பேர், இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார்.

ஆதியிலே பிறந்த மொழிகளாய் ஆரியமும் தமிழும் கருதப்படுகின்றன. இவற்றிலிருந்து பல மொழிகள் பிறந்து வளர்ந்தன. தாய்மைச் சிறப்பும். இவை தொன்மையும் செம்மையும் உடையன. இதில் வடமொழித் தாயின் குழந்தைகள் மட்டுமே உயிரோடு இருக்க, தென் மொழித் தாயான தமிழோ தன் குழந்தைகளுடன் மங்காப் புகழ்பெற்று, குன்றாத இளமையுடன் திகழ்கின்றது. இதில் கன்னடமும் கனிதெலுங்கும் தோன்றின. பலமொழிகள் நாட்டு வழக்கற்றும், ஏட்டு வழக்கற்றும் போக நற்றமிழ் மட்டுமே நானிலம் போற்ற நளினமாய் நடைபயில்கின்றது. இன்றும் தமிழ் ஒரு திரிசொல்லாய் பல்வேறு மொழிகளுள் புகுந்து பரவியுள்ளது.

"யாமறிந்த மொழிகளுள்ளே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் மகாகவி பாரதியார். ஓசைக்கும், ஒலிக்கும் இடையே நுணுக்கமான வேறுபாடு தமிழில் உண்டு. தமிழுக்கு மட்டுமே உரியதாய் சிறப்பொலிகளும் சிறப்பெழுத்துக்களும் கூடக் காணப்படுகின்றன. இதனால் தான் சந்தம் மிகுந்த பல ஒலி விடயங்கள் செந்தமிழில் காணப்படுகின்றன. கம்பராமாயணக் காட்சிகள் இதற்கு நல்ல சான்றுகளாகும். திருப்புகழ் தெய்வத் தமிழினைச் சிறப்பிக்கும் சொல்வோவியமாகத் திகழ்கின்றது. உதாரணமாக "முத்தைத் தரும் பக்தித் திருநகை" என்ற பாடலின் தமிழ் ஒலி சந்தம் கேட்டால் மட்டுமே உரைக்கத்தக்க அழகுடையது. தோற்றப் பொலிவில் கூட ஏற்றம் மிக்கது தமிழ் என்று புகழப்படுகின்றது.

தமிழ் தந்த காப்பியங்கள் எண்ணுக் கணக்கற்றவை. பொய்யா மொழிப் புலவர் செய்த திருக்குறள் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் பாவனையில் உள்ளன. ஐம்பெரும் காப்பியங்களும் தமிழை இன்னும் அழகு படுத்துகின்றன. அழகு தமிழில் பாரதியார் இயற்றிய கவிதைகளும் புகழ்பெற்றவையே. இலகு தமிழில் இன்றிக் கடினத் தமிழ் நூல்களை தொல்காப்பியம், நிகண்டு என்பனவும் பெரிதும் பொருள் பொதிந்த பொக்கிஷங்களாகும். இரண்டு அடிகளில் இவ்வகிலம் அளந்த குறளின் தகைமையை கூறினால், உலகமே தமிழுக்குள் அடங்கிப்போகும் எனில் மிகையல்ல. இச்சிறப்பு வேறெந்த மொழியில் உள்ளது.

ஆனால் இத்துணை சிறந்த எம் தமிழ் இன்று வெறும் நாகரிக மோகத்தால் கொச்சைத் தமிழாய் தலைகுனிந்து நிற்கும் சந்தர்ப்பமும் உண்டு. பிறமொழி மோகம் பலரையும் ஆட்டிப் படைகின்றது. தமிழ்ப் பாடல்கள் என்ற போர்வையுள் மேலைத்தேச இசைக் கோலங்கள் பல மறைந்து கிடக்கின்றன. சங்கத் தமிழ்ப் புகழ் மங்கிச் செல்லும் அபாயம் நெருங்குகின்றது. மொழிக் கலப்பால் தமிழின் தனித்துவ அழகு சிதைகின்றது. இனிமை கெடுகின்றது.

இவ்வேளையில் தமிழ் வளர்த்த பெரியோரின் வரலாறுகள் மீட்டுப் பார்க்கப்பட வேண்டும். "முன்னைப் பழம் பொருட்டு முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் போற்றும் அப்பெற்றினையாய் உள்ள இறைவன் போல, எம் மொழி தன்னிலை மாறாது வாழ மாணவ சமுதாயம் பாடுபட வேண்டும். தெளிவாகத் தனி அழகு சிதையாதபடி பல்மொழியறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்.

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே.

**செல்வி அ.செமியா**
**தரம் 9**

# விஞ்ஞானத்தின் விந்தை

நிலா நிலா ஓடி வா நில்லாமல் ஓடிவா மலைமேல் ஏறி வா மல்லிகைப் பூ கொண்டு வா என்று நிலாவை அழைத்து பாடிய காலம் மலையேறிவிட்டது. இப்போது நிலவினிலே மனிதன் காலடி வைத்த காலமாக மாறிவிட்டது. விஞ்ஞானம் இந்நாளில் விளைக்கும் விந்தைகள் பற்பல ஆகும். மனிதன் எப்போது சிந்திக்க தொடங்கினானோ அப்போது விஞ்ஞானத்தின் விந்தையின் வளர்ச்சி தொடங்கிவிட்டது எனலாம். விஞ்ஞானமானது காலத்திற்கு காலம் வளர்ந்து கொண்டே வருகின்றது. விஞ்ஞான வளர்ச்சியினால் மனித குலம் பல்வேறு நன்மைகள் பெற்று வருகின்றது. எங்கு பார்த்தாலும் விஞ்ஞானத்தின் பயனாகவே மாறிவிட்டது. விஞ்ஞானத்தில் ஒரு மனிதன் அங்கங்களை பகுதி பகுதியாக பிரித்து ஆராய்ந்து விளக்கமாக அதைக் கற்கலாம்.

அது மாத்திரமன்றி வேறு பல துறைகளில் நல்ல வேலைகளையும் நல்ல மரியாதையும் பெற்றுக் கொள்ளலாம். விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பச் சாதனங்களின் பெருக்கம் பல்வேறு துறைகளிலும் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு துறையிலும் உயர் மட்டத்தில் மட்டுமன்றி, சாதாரண மக்களின் பாவனையிலும் விஞ்ஞானம் ஆச்சரியப்படத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. மருத்துவம், பொறியியல், விவசாயம், விண்வெளி, ஆய்வுத் தகவல் தொடர்பான பற்பல துறைகளில் விஞ்ஞானம் ஏற்படுத்தியுள்ள மாற்றம் அனேகம். விஞ்ஞானத்தின் மூலம் அண்டவெளியில் பல்லாயிரக் கணக்கான தொலைவிலுள்ள கோளங்களையும், சமுத்திரன் அடியில் அமிழ்ந்து கிடக்கும் பொருட்களையும் ஆராட்சிக்கு உட்படுத்தும் வாய்ப்புக்கள் ஏற்படும். வீடுகளிலும் மக்களின் பாவனையிலும் உள்ள பொருட்கள் விஞ்ஞானக் கண்டு பிடிப்பு பொருட்களாகும். சாதாரணமாக விஞ்ஞானம் என்று கூறும்போது நம்முடைய கண் முன்னர் சினிமா, ரேடியோ, தந்தி, டெலிபோன் போன்ற பொருட்களே வந்து நிற்கும். இன்னும் கொஞ்சம் சிந்தித்தோமானால் இன்செக்ஷன், எக்ஸ்ரே போன்ற வைத்திய நுட்ப விடயங்கள் தோன்றும். இன்றைய உலகானது விஞ்ஞானத்தினது விந்தைகளினால் ஆன தொழில்நுட்ப பொருட்களினால் மூடப்பட்டுள்ளது.

நாள்தோறும் புதுபுது விஞ்ஞான அற்புதங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. மக்களாகிய நாம் காலையில் எழுவது முதல் இரவில் உறங்கும் வரை எத்தனையோ வகையான விஞ்ஞான உற்பத்திப் பொருட்களை உபயோகித்து வருகிறோம். விஞ்ஞான பொருட்கள் யாவும் விந்தையாகவே காணப்படுகின்றன. விஞ்ஞானத்தில் நாம் பல்வேறு வகையான அமிலங்களையும் இனங்கண்டு கொள்ளலாம். விண்ணிலும் மண்ணிலும் கடலிலும் ஆக்கபூர்வமான அற்புதங்களை நிகழ்த்த வல்லது விஞ்ஞானமாகும்.

விஞ்ஞானத்திற்கு எல்லை இல்லை. முன்னைய காலத்தில் கட்டை வண்டியில் போன அவர்கள் இன்றைய காலத்தில் விஞ்ஞானத்தின் விந்தையினால் காற்றிலே பறக்கின்றனர். எந்த இடத்திற்கும் ஒரு சில மணிநேரத்தில் சென்றிடும் வாய்ப்பு கிட்டியுள்ளது.ஆகவே இந்த உலகத்தில் முக்கியமாகக் காணப்படுவது விஞ்ஞான விந்தையினால் ஏற்படுத்தப்பட்ட தொழில்நுட்ப பொருட்களாகும்.

விஞ்ஞானத்தை வளர்த்தாலன்றி விமோசனமில்லை என்ற பெரியவர்களின் வாக்கிற்கிணங்க விஞ்ஞானத்தின் விந்தைகளை நாமும் அறிந்து மற்றவர்களுக்கும் அறிவிப்போம். விஞ்ஞானத்திற்கு எல்லை இல்லை.

*Miss P.Jaksana*
*Grade - 10*

## பாடசாலை

அன்பாகவும் அழகாகவும்

அரவணைப்புடனும் மாணவர்களுக்கு

பாடங்களையும் பலவிதமாக

கற்றுத்தந்த எமது பாடசாலையே

நல்ல நண்பர்களையும்

இன்பமாகவும் இலவசமாகவும்

எமக்கு பாடங்களை மனதில்

பதியச் செய்து நாட்டில்

நல்லதொரு பிரஜையாகவும்

வாழ வாழ்க்கையில் வழி

நடத்தித்தந்த பள்ளியே

நீண்டகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றேன்

# மனிதனை உருவாக்குவதில் விளையாட்டின் பங்கு

இன்றுள்ள கல்வித் திட்டத்தில் விளையாட்டுக்கள் தனிச்சிறப்புடைய ஓரங்கமாக விளங்குகின்றன. ஏட்டுக்கல்வி, செயன்முறைக் கல்வி என்பவற்றிற்கு எத்துணைச் சிறப்புண்டோ, அத்துணைச் சிறப்பு விளைாட்டுக்கும் உண்டு என்று கல்வியற்திட்டம் வலியுறுத்துகிறது. அன்றியும் கல்விச் சாலைகளிலே மாணாக்கா் மனத்தைப் பெரிதும் கவா்ந்துள்ள துறையும் அதுவேயாகும். ஓடி விளையாடுவதில் நாட்டம் கொள்ளாத குழந்தைகளிடத்தில் சில குறைபாடுகளுள்ளன என்பது உளவியல் நூல் வல்லவா் கண்ட முடிபாகும். கல்விச்சாலைகளிலே விளையாட்டு நேரமே மற்றெல்லா நேரங்களையும் விடமன மகிழ்ச்சியுஞ் சுறுசுறுப்பும் வாய்ந்ததோா் இன்பப் பொழுதைக் காட்சியளிக்கின்றது. எனவேதான் மனமகிழ்வோடு தன்னிச்சை கொண்டு வெகு இலகுவாகச் செய்யப்படுவது விளையாட்டென்றும் பரிபூரண விருப்பின்றி ஓரளவு சிரமத்தோடு செய்யப்படுவது. வேலையென்றும் எண்ணப்படுகிறது. அதனால் எந்த வேலையும் மனமகிழ்வோடு சிரமமின்றிச் செய்யப்படுமானால், அது விளையாட்டாகிறது. எந்த விளையாட்டும் தன்னிச்சையின்றிச் சிரமத்தோடு செய்யப்படுமானால் வேலையாகிறது.

விளையாட்டென்று கூறும் போது அதற்குரிய சில சிறப்புப் பண்புகளை நாம் அவதானித்தல் வேண்டும். மன மலா்ச்சியோடு இலகுவாகச் செய்யப்படுவது மாத்திரமின்றி அது உடலுறுப்புக்களுக்கு உரமளிப்பதாகவும் அமைதல் வேண்டும். குழு முறையிலோ, தனி முறையிலோ போட்டியுணா்வு நிலவுதல் வேண்டும். இத்தன்மைகள் நிறைந்து விதிகளினாலே நெறிமுறையாக அமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றன. கிளித்தட்டு மறித்தல், கெந்தியடித்தல், கிட்டியடித்தல், சடுகுடு முதலிய சுதேச விளையாட்டுக்கள் நம் நாட்டிற்கு பெருமையுடன் விளையாடப்படுகின்றன. கிரிக்கெட் பந்தாட்டம், உதைபந்தாட்டம், மென்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் முதலிய பல வகைப் பந்தாட்டங்களெல் லாம் மேலைத்தேய விளையாட்டுக்கள் எனப்பட்டு மக்களின் மனத்தைப் பெரிதும் கவா்ந் துள்ளன. இவ் விளையாட்டுக்கள் யாவும் திறம்பட அமைக்கப்பட்ட இரு வேறு குழுக்கள் ஒன்றை யொன்று வெல்ல முயலும் போதே பெரிதும் சிறப்படைகின்றன. இம்முயற்சி விளையாட்டுப் போட்டி எனப்படும்.

போட்டி விளையாட்டுக்களில் ஒரு குழு தன் எதிா் குழுவை எதிா்பதிற் காட்டும் வேகமும் திறமையும் ஈட்டும் வெற்றியும் மாத்திரமன்றி எதிா்க்குழு எதிா்ப்பைத் தாங்கிப் போராடும் பண்பும் காணப்படுகின்றன. போட்டியிடும்போது ஒவ்வொரு குழுவும் வெற்றியே குறிக்கோள். அக்குறிக்கோளை அடைவதற்குள் தப்பு வழிகளைப் பின்பற்றுதலும் மாற்றுக் குழுவினரை வெறுத்துப் பொறாமைப் பட்டு கோபங் கொள்ளுதலும் இழுக்காகும். இவ்வித சீரான போட்டி விளையாட்டுக்கள் ஒவ்வொரு நாட்டிலும் பலவகை அமைப்பு முறைகளுக்கேற்ப விளையாடப்படுகின்றன. அன்றியும் ஒரு நாடு இன்னொரு நாட்டை எதிா்த்துப் போட்டியிடுதலும் உண்டு. உலக நாடுகளுக்கிடையே நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியும் இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, இந்தியா, மேற்கிந்திய தீவுகள், பாகிஸ்தான், இலங்கை என்பவற்றுக்கிடையே

நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளும் உலகப் பிரசித்தமானவை. பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னே கிரேக்க நாட்டிலே வீரர்களிடையே தோன்றி வளர்ந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி உலக நாடுகளால் போற்றப்பட்டு காலத்துக்குக்காலம் பலபல நகரங்களில் நடைபெற்று வருகிறது. இவ்விளையாட்டுப் போட்டிகளிலே உலக நாடுகள் தாபிக்கும் சாதனைகள் அகில உலக சாதனைகளாகி அந்நாடுகளுக்கு அழியாப் புகழையும் கொடுக்கிறது. விளையாட்டுப் போட்டிகளிலே பங்குகொள்ளும் வீரர்கள் ஓடியாடி விளையாடுவதனால் அவர்களின் இரத்தம் தூய்மை பெற்று இரத்தோட்டம் சுறுசுறுப்படைகிறது. அதனால் செம்மையான ஜீரண சக்தி சித்திக்கிறது.

உடலெங்குமுள்ள தொழிற்பட்டு தசைநார்கள் வலுவடைகின்றன. நிமிர்ந்த முதுகும் அகன்ற மார்புத் திண்ணிய தோள்களும் அளவளவான பிற அங்க அமைப்பும் வாய்க்கப்பெற்றுக்கட்றுதியும் வனப்பும் நிறைந்த தேகத்தோடு, நோயற்ற வாழ்வு வாழ முடிகிறது. இவையனைத்தும் விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டு வீரர்களுக்கு உடல் சம்பந்தமாக அளிக்கும் உயரிய பரிசுகள்.

இவ்வகையான உடற்பயன்கள் மாத்திரமின்றி, உளப் பயன்கள் பலவும், விளை யாட்டுப் போட்டியால் விளைகின்றன. தன் திறமை வெளிப்பட வேண்டும், தானே பலராற் புகழப்பட வேண்டும் என்று மனிதன் ஒவ்வொருவனும் எண்ணுவது இயல்பே. தன்னலம் மறந்து தடுமாறுவது மிக அரிது. தேவையான வேளைகளிற் காணப்படும் தன்னல மறுப்பும் தியாக மனப்பான்மையும் வாழ்க்கையிற் பொறக்கூடிய இருபெறும் பேறுகளாகும். போட்டி விளையாட்டுக்களிலே தன் குழுவின் ஓர் அங்கத்தவனென்றும் தன் குழுவின் வெற்றியே தன் வெற்றியென்றும் ஒவ்வொருவனும் எண்ணுதல் வேண்டும். இவ்வுணர்வில் நான் என்ற சுயநல எண்ணம் மறந்துவிட , நமது குழு என்ற பொது நலமே மேம்பட்டு நிற்கிறது. தமது குழுவின் உயர்வுக்காக ஒவ்வொருவனும் தனது கொள்கைகள், எண்ணப் பாங்குகள் ஆகியவற்றைக் கூடத் தியாகஞ் செய்ய வேண்டி ஏற்படுகிறது. இப் பண்பே வாழ்க்கையில் அவனை நல்லதொரு குடிபதியாக்கி மேன்மை அளிக்கிறது.

குழந்தைகள் விளையாடும்போது எதிர்பாராதவிதமாக ஒருவரையொருவர் தாக்கிச் சண்டையிடுவர். அடுத்த கணம் சமாதானம் அடைந்து சேர்ந்து விளையாடுவர். அவர்களிடையே சண்டை உண்டு, ஆனால் கோபமில்லை. இதுவெ குழந்தைப் பண்பு. இக் குழந்தை மனநிலையை வளர்த்து வாழ்க்கையை வளப்படுத்துவது விளையாட்டுப் போட்டியே. இச்சீரிய பண்பு வாழ்க்கையிற் கைகூடி விட்டால் வாழ்வு சுவர்க்கமாகிவிடும்.

விளையாட்டு சமுதாயத்திலே பிரிக்க முடியாத ஓர் அங்கமாக அமைந்திருக்கிறது. அது மனிதப் பண்புகளையுஞ் சமுதாயப் பண்புகளையும் வளர்ப்பதோடு உறுதி பெற்ற உடலையுந் தந்து, ஒவ்வொருவனையும் முழு மனிதானக்குகிறது. வளமான சீரிய வாழ்வுக்கு வேண்டிய நற்பண்புகளைப் பயிற்றிப் பண்படுத்திவிடும். நல்லதோர் ஆசானாக விளங்குகிறது.

**செல்வி அ.சுபிதா**
**தரம் 10**

# இன்றைய கல்வி நிலை

கல்வித்துறை என்பது மனித மூல வளத்தில் தங்கியுள்ள துறை ஆகும். எனவே தான் கல்வி என்பதன் பொருள் மனிதன் அவனின் அறியாமையினை அகழ்தல் - கல்லுதல் என்பார் நன் நூலார். என் பார்வை ஆனது கற்றல் *(learning)* என்பது புத்தகங்களும் ஆசிரியர்களும் கூறியவற்றை அப்படியே ஏற்றுக்கொள்வதில்ல. பரீட்சையில் மாணவரை வெற்றி பெறச் செய்தல் உண்மைக் கல்வியுமல்ல. கற்பவனை வாழ்க்கைப் பரீட்சையில் வெற்றி பெறச் செய்வதே உண்மையான கல்வி ஆகும்.

ஒருவனிடம் நீண்டகாலம் நிலைத்திருக்க கூடிய சுயஅறிவு திறன், மனப்பாங்கு ஆகிய மூன்று துறைகளிலும் ஏற்படுகின்ற நடத்தை மாற்றமே கற்றல் என்பர். உளவியலாளர்கள் இன்றைய எமது கல்வி முறை ஒரு மனிதனை மருத்துவனாகவோ, பொறியிலாளனாகவோ, ஆசிரியனவாகவோ உருவாக வாக்குவதேயன்றி மனிதனை உண்மையான மனிதனாக உருவாக்கவில்லை எனக் கவலை கொள்கிறார் முன்னால் ஐ.நா. சபைச் செயலாளர் நாயகம் ஊத்தாண்ட்.

இன்றைய கல்விக் கூடங்கள் மானிட நேயமற்ற, பண்பாடில்லாத மனிதர்களை உருவாக்கும் தொழிற்சாலைகளாகவே காணப்படுகின்றன. மனிதனை அளப்பதற்குச் சிறந்த அளவு கோல் மனிதனே என்பர் தத்துவாசிரியர் கன்பூசியஸ் மாணவர்கள் எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் வாழ்க்கை திறனை அதிகரிக்கும் கல்வியைப் பெறுதலைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். ஆக்கத்திற்கு உதவிய எமது விஞ்ஞான அறிவு வளர்ச்சி ஆனது உலக அமைதியின்மையை ஏற்படுத்தி அழிவிற்கும் துணை நிற்கின்றது. ஆக்கத்தினுடைய மாணவர்கள் மற்றவர்கள் சொல்வதை அவதானமாகக் கேட்டார்கள். ஆனால் அதை எடுத்த எடுப்பிலேயே ஏற்க மாட்டார்கள். அதேவேளை பல்வேறு கோணங்களிலும் அதனைச் சுய ஆய்வு செய்து பார்ப்பார்கள் கண்டிப்பு அதிகமாயிருப்பின் விட்டுக் கொடுக்கவும் மாட்டார்கள். பிழைகளில் மிகப் பெரிய பிழை எதுவென்றால் கல்வி கற்காமை ஆகும். சமூகத்துடன் இணைந்தும் தனியாகவும், சமூக மயமாகவும் பொருளாதாரம் சமூக வாழ்வு என்பவற்றில் மேன்மையுறவுமே கல்விக் கோட்பாட்டை இன்றைய அறிவியல் கல்வி விழுங்கி விட்டது. கல்வியின் நோக்கம் கற்பவனை அவனுடைய நுண்ணறிவுப் பயிற்சியோடு மனத்தூய்மையும், ஆன்மீக நெறிகளையும் கற்பிப்பதாக இருக்க வேண்டும்.

இன்றைய உலகின் அமைதியின்மைக்கு மாணவர்களின் பிறவாழ்வுகளுக்கு முக்கிய காரணம் எமது தேசிய கல்வியானது பாடசாலைகளுடன் அறிவூட்டல்களையும், வினைத்தினூட்டல்களையும் மையக் கருவாகக் கொண்டு மானிட நேயம் தழுவுகின்ற பண்டைய அறிவியல் கல்வி விழுமியங்களைப் புறந்தள்ளியுள்ளமையே இதனால் அறிவின் நோக்கத்தை எம் கல்விக் கொள்கை எட்டவில்லை மற்றவர்களுக்காக வாழ்பவரே உண்மையாக வாழ்கின்றார்கள்.

அறிவினாலாக வதுண்டா - பிறிதின்நோய்
தன் நோய் போல் போற்றக் கடை

என்ற வான் புகழ் ஞானியின் வரைவிலக்கணத்தை மீறியமையால் அமைதியற்ற வாழ்வினுள் தள்ளப்பட்டுள்ளோம். அறிவின் விளிம்பில் இன்றைய உலக மக்கள் உள்ளனர் என்பார். முன்னால் ஐ.நா. சபைச் செயலாளர் நாயகம் ஊத்தாண்ட்.

மேலும் கடந்த மூன்று தசாப்தங்களாக எமது பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த சூழல், இடப்பெயர்வு, இழப்புக்கள், மனப்பயம், மனவடு, தொழில் வாய்ப்புச் சுருங்குதல் மாணவர்கள் பாடசாலை விடுதிகளை மேற்கொள்ள முடியாது போல கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது போனமை, பாடசாலையின் வளப்பற்றாக்குறை, மாணவர்கள் ஆசிரியர்களின் முன்னைய காலம் போல ரியூசன் தவிர்ந்த ஒன்று உடல் இவை போன்ற காரணிகளால் எமது இன்றைய கல்வி நிலை காணப்படுகிறது.

**செல்வி பா.லக்சனா**
**தரம் 10**

# நூறு ரூபாய்த் தாள் ஒன்றின் சுயசரிதை

நான் இன்று வங்கியில் ஆயிரம் ரூபாய் கட்டுக்குள் அடங்கிக் கிடக்கின்றேன். நான் இங்கு வருமுன்னர் பல தரப்பட்ட மனிதர்களிடம் பல்வேறு அனுபவங்களைப் பெற்றிருக்கின்றேன். நான் முதன் முதலில் இங்கிலாந்து தேசத்தில் பிறந்தேன். எனது உடலில் இலங்கையில் உள்ள அழகிய குருவிகளின் வனப்பை வரைந்திருந்தனர். சிலர் என்னை எப்போதும் தங்களுடன் வைத்துக் கொள்ள ஆசைப்பட்டனர்.

இலங்கை மத்திய வங்கியில் நான் வந்திருக்கும்போது எழில் பிரகாசிக்கக் காண்பவர் கண்ணைக் கவரும் வகையில் அழகும் இளமையும் கொண்டு விளங்கினேன்.

ஒரு நாள் மத்திய வங்கியிலிருந்து வேறொரு வங்கிக்கு எனது சகோதரர் பலருடன் பயணம் செய்தேன். வங்கி அதிகாரி எங்களை ஒரு பெட்டிக்குள் அடைத்து எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். மோட்டார் கார் ஒன்றில் எங்களை வைத்துக்கொண்டு சென்றனர். பொலிஸ் பாதுகாப்புடன் நாங்கள் அக் காரில் சென்றோம். மலை நாட்டில் உள்ள வங்கி ஒன்றினுள் எங்களைக் கொண்டு சென்று வைத்தனர். மீண்டும் நாங்கள் பாதுகாப்புடன் இரும்புப் பெட்டி ஒன்றினுள் வைத்துப் பூட்டப்பட்டோம்.

சில நாட்கள் எனது சகோதரர்களுடன் அடங்கிக் கிடந்தேன். ஒரு நாள் தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர் ஒருவர் வங்கிக்குக் வந்தார். தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காக எங்களை அவர் வாங்கிச் சென்றார். மோட்டார் காரில் மீண்டும் பயணம் செய்தோம். தோட்டத்துரையின் அலுவலகத்திற்குச் சென்றோம். அங்கு தொழிலாளர்கள் பலர் வரிசையாக வந்து கையெழுத்துப் போட்டுச்

சம்பளத்தைப் பெற்றுச் சென்றனர். இராமுவின் முறை வந்தபோது துரை அவர்கள் என்னையும் சில சகோதரர்களையும் அவனிடம் கொடுத்தார். அவன் எங்களை வாங்கி மடித்துத் தனது மடியில் வைத்துக் கொண்டான். பின்னர் உற்சாகத்துடன் வீட்டுக்குச் சென்று தனது மனைவியிடம் எங்களைக் கொடுத்தான். அவனது மனைவி ஒவ்வொருவராக எடுத்துப் பார்த்தாள். சந்தோஷப்பட்டாள். என்னைத் தன்னுடன் வைத்துக் கொண்டாள் ஏனையவற்றை இராமு வாங்கிக் கொண்டான். இராமுவின் மனைவி என்னை ஒவ்வொரு நாளும் காலையில் எடுத்துப் பார்ப்பாள். அழகான ரூபா நோட்டு என்று கூறுவாள். தனது சேலைத் தலைப்பில் முடித்துக் கொள்வாள்.

ஒருநாள் இராமுவின் மகன் கண்ணன் பாடசாலைக்குச் செல்வதற்குப் பணம் கேட்டான். இராமுவின் மனைவி என்னை அவனிடம் கொடுத்தாள். அப்போது நான் நன்கு கசங்கியிருந்தேன். கண்ணன் என்னை ஒரு சில்லறைக் கடையில் கொடுத்து மாற்றிப் பணம் பெற்றான். அந்தக் கடைக்காரன் நல்ல புத்திசாலி. அவன் என்னைக் கொண்டு சென்று தான் வைத்திருந்த ஏனைய நூறு ரூபாய் தாள்களுடன் என்னையும் சேர்த்து எண்ணினான். அப்போது பத்தாயிரம் ரூபா இருந்தது. அவன் என்னையும் எனது சிறந்த பயனைப் பெற அவன் விரும்பினான். அவன் என்னையும் எனது சகோதரர்களையும் கொண்டு சென்று தேசிய சேமிப்பு வங்கியில் தனது பெயரில் இருப்புப் பணமாக வைத்தான். இங்கே எங்களுக்கு நிறையப் பாதுகாப்பு உண்டு. அதுவுமல்லாமல் எங்களை, வங்கியிலிட்டவருக்கு வட்டியாகப் பணமும் கிடைக்கிறது. எனது மதிப்பும் குறையவில்லை.

ஆனால் நீண்ட நாட்கள் வங்கியில் கிடக்க முடியவில்லை. வியாபாரி ஒருவர் வங்கியிலிருந்து என்னையும் என்னைப் போன்றவர்களையும் வாங்கிச் சென்றார். மீண்டும் பழைய வாழ்க்கை ஆரம்பமாயிற்று. நான் கைமாறிக் கசங்கிக் கொண்டே இருந்தேன். என்மேல் இருந்த இலக்கங்களும் எழுத்துக்களும் உருத் தெரியாமற் கிழிந்துவிட்டன. என்னை வாங்குபவர்கள் முன்போல் உடனே ஏற்றுக் கொள்வதில்லை. திருப்பித் திருப்பித் பார்கிறார்கள். இது கிழிந்த காசு வேண்டாம் என்கிறார்கள். இந் நிலையில் என்னை வைத்திருந்த வியாபாரி ஒருவர் வங்கியில் ஒப்படைத்து விட்டார். நான் புழக்கத்தில் இருக்க முடியாதென ஒதுக்கப்பட்டு விட்டேன். என்னைப் போல் மதிப்பிழந்த நோட்டுக்களுடன் இப்போது அடங்கிக் கிடக்கிறேன். விரைவில் எங்களை மத்திய வங்கியில் ஒப்படைப்பார்களாம். அங்கு பாவனைக்குத் தகுதியற்ற நோட்டுக்களை எரித்து அழித்து விடுவார்கள் எனக் கூறுகிறார்கள். அந் நாளை எதிர்பார்த்த வண்ணம் ஏங்கிக் கிடக்கிறேன். என்னுடைய அனுபவத்தில் நான் தெரிந்து கொண்டுள்ள உண்மையொன்றை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஒரு நாணயத் தாள் என்ற முறையில் நான் ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்காமல் பலரிடமும் கைமாறியதாற்றான் வர்த்தகம் செழிக்கிறது. என் போன்ற நாணயத் தாள்களை வீடுகளில் பூட்டி வைப்பதில் பயன் இல்லை. நாம் எவ்வளவுக்கெவ்வளவு சுற்றிக் கொண்டிருப்போமோ அவ்வளவுக்கவ்வளவு மக்கள் வாழ்க்கை செழிப்படைய வாய்ப்பேற்படும்.நான் அனுபவத்தில் கண்ட உண்மை இது. என் கதையைக் கேட்டதற்கு மிக்க நன்றி.

**செல்வி ம.மதுஷாயினி**
**க.பொ.த. (சா/த)**

# விவசாயி

வாழ்வாதாரம் செழிக்க...
வயல் வெளியில் கால் பதிப்பான்
வறுமை தன்னை ஆளும் போதும்
வரப்பு வாய்க்கால் என நினைப்பான்
எருதுகளை உறவுகளாக எண்ணி
உழுதுதினம் பிழைப்பான்
களையெடுத்து கதிரறுக்க
இரவு பகல் கடுமையாக உழைப்பான்

பாதம் நனைத்து
தினம் சேற்றில் குளிப்பான்
ஆதவனை துதித்து
போற்றி பாட்டுப் பாடிடுவான்
மாதம் பல காலில் இட
தன் காலணியை மறப்பான்
சாதம் இட தரணியிலே
ஒரு அவதாரமாய் அவதரிப்பான்

வெயிலினிலே விதை விதைச்சு
வேதனையை வேர்வையிலே கரைப்பான்
வெண் பனியினிலும் வெத வெதத்து
வேளாண்மைக்கு வேராகத் தான் இருப்பான்
அறுவடை நெருங்க நெருங்க
அடகு வைத்து அடகு வைத்து
பணத்தை படையல் வைப்பான்

கருவறையில் கருத்தெறித்து
குழந்தை பெறுவது போல
நாளை எண்ணி எண்ணி
காத்திருப்பான்

மழை வெள்ளம் குறைந்திடாமல்
அடிவானம் நோக்கி காத்திருப்பான்
அடை மழை நெருங்கிட்டால்
அடி வயிற்றில் நெருப்ப கட்டி
ஆண்டவனை நினைத்திருப்பான்

ஆதி முதல் இன்று வரை கோவணம்தான்
என்றும் உடையென அணிந்திருப்பான்
பாடு பட்டும் கூடமீதமென இருப்பதுவும்
கோவணம் தான் என விடையளிப்பான்...

பா.லக்சனா
தரம் 10

# பாடசாலைக் கலாசாரம்

கலாசாரம் என்பது காலம் காலமாக நிலவி வரும் பண்பாட்டு விழுமியங்களை கட்டிக் காக்கும் செயற்பாடு கலாசாரமாகும். அந்த வகையில் எமது பாடசாலையானது சீருடை, கழுத்துப்பட்டி, சமய விழுமியம், ஆசிரியர், சீருடை, ஆபரணம் அணிதல், வகுப்பறைக்கு வெளியே செல்லல் போன்றன தொடர்பாக கலாசார பண்பாடுகளை மேற்கொள்கின்றோம்.

மாணவர் பாடசாலைக்கு வெள்ளைச் சீருடை அணிந்து மரூண் துணியில் வெள்ளைக் கோடுகள் குறுக்காக இடப்பட்ட களுத்துப்பட்டியினையும் சப்பாத்தும் அணிந்து வருவர். தரம் 1-5 வரையான ஆண் மாணவர்கள் வெள்ளைச் சேட்டும் நீலக் காற்சட்டையும் அணிந்து வருவர்.

சமய விழுமியப் பண்புகளை நோக்கும் போது பாடசாலையில் நவராத்திரி விழாவானது மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாணவர்கள் பாடசாலையிலிருந்து குழுவாகச் சென்று பாடசாலைக்கு அருகிலுள்ள சிவன், முருகன் ஆலயங்களிற்குச் சென்று தோத்திரம் பாடி இறைவனை வழிபட்டு வருவர். ஆசிரியர்களும் மாணவிகளுடன் செல்வர். பின்னர் ஆசிரியர்கள் நற்சிந்தனை கூறுவார்கள்.

எமது பாடசாலையில் ஆசிரியர்கள் விரும்பிய வர்ணங்களில் சேலை அணிந்து வருவர். ஆண் ஆசிரியர்கள் சேட், நீளக்காற்சட்டை, சப்பாத்து அணிந்து வருவர்.

மாணவர்களின் பாதுகாப்புக் கருதி எமது பாடசாலை மாணவர்கள் தோடு மாத்திரமே அணிவர். மாணவர்கள் வகுப்பறைக்கு வெளியே செல்லும்போது தேவை கருதி ஆசிரியர் அல்லது வகுப்பு மாணவத் தலைவர்களின் அனுமதியுடன் வெளியே செல்வர். பாடசாலை நேரத்தில் எந்த ஒரு மாணவனும் வெளியில் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

பெற்றோர்கள் அதிபர் ஆசிரியர்களை சந்திப்பதற்காக பாடசாலை நேரங்களில் எந்த நேரமும் சந்தித்து உரையாடலாம். எமது பாடசாலை மாணவர்கள் கையடக்கத் தொலைபேசி பாவிப்பதில்லை. ஆசிரியர்கள் அவசிய தேவையின் நிமித்தம் தொலைபேசி அழைப்புக்களை பயன்படுத்துவர்.

எமது பாடசாலையின் சுகாதார தூய்மையினை பிரதிபலிப்பதாக மலசலகூடம் காணப்படுகிறது. மலசல கூட பாவனையானது ஆசிரியர் மாணவர்களுக்கு பகுதி பகுதியாக கட்டப்பட்டுள்ளது. இதனை சுத்தம் செய்வதற்கு தரம் 6 - 11 வரையான வகுப்புக்களுக்கு பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற் கூறப்பட்டவற்றை தொகுத்து நோக்கும் போது எமது பாடசாலையின் கலாசாரப் பண்புகளானது மாணவர்களை எதிர்கால சமூகத்தில் நற்பிரஜையாக திகழ்வதற்கு வழிசமைக்கின்றன.

"கலாசாரம் பேணி கண்ணியமாய் வாழ்வோம்"

# பாடசாலைச் சூழலும் வெளிக்காரணிகளும்

எமது பாடசாலை வடமாகாணத்தில் யாழ்ப்பாண நகரத்தில் இருந்து 32km தூரத்தில் தீவக கல்வி வலயத்தில் வேலணை கல்வி கோட்டத்தின் கீழ் அமைந்துள்ளது. இங்கு 1991 இடப்பெயர்வின் பின் இங்கு 20% மக்களே வாழ்ந்து வருகின்றனர். இங்கு வாழும் மக்களில் பெரும்பாலனவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களாகக் காணப்படுகின்றனர். இக்கிராமமான புங்குடுதீவு நன்னீர் குறைந்த கிராமமாகக் காணப்படுகிறது. இங்கு தொழில் வாய்ப்புக் குறைவாகவும் காணப்படுகிறது.

இங்கு கலை கலாசார நிலைகள் குறைவாகக் காணப்படுகிறது. இங்கு பெற்றார் கல்வி குறைந்தவர்களாகக் காணப்படுவதால் கல்விக்கு அளிக்கும் முக்கியத்துவம் குறைவாகக் காணப்படுகிறது. இதற்கு திட்டமுன் மொழிவின் மூலம் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இங்கு உலக உணவுத் திட்டம், யுனிசெவ் நிறுவனம் போன்றன உதவி புரிந்து வருகின்றன. GIZ நிறுவனம் சேவாலங்கா போன்றன பௌதீக வளத்திற்கு உதவி புரிந்து வருகின்றன. எதிர்காலத்தில் இப்பாடசாலையின் கல்வி பயனுறுதி வாய்ந்ததாகவும், விளைதிறன் மிக்கதாகவும் அமைவதற்கு இங்கு முன் வைக்கப்படும் திட்ட முன்மொழிவுகள் பேருதவி புரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அறிமுகமும் பின்னணியும்

**பாடசாலை தொடர்பான அடிப்படை விபரங்கள்**

1. பாடசாலை பெயர் : யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
2. பாடசாலை முகவரி : 1ம் வட்டாரம் புங்குடுதீவு
3. கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் : புங்குடுதீவு வடக்கு மத்தி J/28
4. பிரதேச செயலர் பிரிவு : தீவுப்பகுதி தெற்கு
5. பாடசாலைக் குறியீட்டு இலக்கம் : 1014008
6. பாடசாலை வகை : Type 2
7. வகுப்புக்களின் பரம்பல் : 1-11
8. பிரதான மொழி மூலம் : தமிழ்
9. Blingual கற்கை உள்ளதா? : இல்லை
10. இட அமைவு : கிராமம்
11. தொலைபேசி இலக்கம் 1. அலுவலகம் : 021.3207790
    அதிபர் வதிவிடம் : 0313734046
    அதிபரின் கைத்தொலைபேசி : 0779789236
12. ஈமெயில் முகவரி :
14. இணையத்தள முகவரி : punguduthivusupramaiya @gmail.com

# எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

## யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

## பாடசாலை வரலாறு

சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடபகுதியில் அமைந்துள்ள தீவுகளில் புங்குடுதீவும் ஒன்றாகும். இங்கு முதலில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூலம் செந்தமிழ் பயிற்றப்பட்டது. ஆயினும் கல்வித் தாகம் கொண்ட பல மாணவர்களுக்குப் பணி செய்ய முடியாத திண்டாட்டத்தினால் சைவகலாமன்றம் 1926 ம் ஆண்டு இப்பாடசாலையை அமைத்தது.

ஆரம்ப பாடசாலையின் தலைமையாசிரியராக உயர்திரு.நமசிவாயம் அவர்கள் பணியாற்றினார். பின்னர், சின்னையா ஆசிரியர் அதிபராக தொடர்ந்து பணியாற்றினார். அடுத்து, 1929ம் ஆண்டு முதல் பேராசியர் உயர்திரு சி.இ.சதாசிவம்பிள்ளை அவர்கள் தலைமைப் பீடத்தில் அமர்ந்து அரும்பணி புரிந்தார். 1935ம் ஆண்டு புரட்டாதி மாதம் இப்பாடசாலை துவிபாஷா பாடசாலையாக மாறியது. இப்பகுதி முகாமையாளராக விளங்கிய உயர்திரு வ.பசுபதிப்பிள்ளை அவர்களின் அயரா உழைப்பினாலும் மதிநுட்பத்தினாலும் இப்பாடசாலை 1966ம் ஆண்டு வரை எஸ்.எஸ்.சி. வகுப்புள்ள உயர்தரப் பாடசாலையாக மிளிர்ந்தது. இக்காலத்தில் சிறந்த தலையாசிரியர்களும் உதவியாசிரியர்களும் கடமையாற்றினார்கள்.

தலைமையாசிரியர்களில் திரு.கு.வி.செல்லத்துரை அவர்கள் குறிப்பிடத்தக்க சேவை புரிந்தவர். இப்பாடசாலையின் கட்டிடத்தை சிறந்த முறையில் திருத்தியமைத்ததோடு, இதனைப் பெண்கள் வித்தியாலயமாக மாற்றியமைப்பதற்குப் பெரு முயற்சி எடுத்தார். 01.05.60 தொடக்கம் 03.05.64 வரையுள்ள காலப்பகுதியில் கல்வி நிறை உன்னத நிலையிலிருந்தது. உதவியாசிரியராகக் கடமையாற்றிய திரு.அ.கனரெத்தினம் அவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் பல மாணவர்கள் சித்தியெய்த உதவி புரிந்தார்.

இப்பாடசாலை 1980ம் ஆண்டு யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய கனிஷ்ட மகாவித்தியாலயம் எனும் பெயரிலிருந்து யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது ஓர் மகளிர் வித்தியாலயமாக இருந்தாலும் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரை இரு பாலாரும் கற்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. 1973 இலிருந்து 1985 வரையான காலப்பகுதியில் திரு.யோ.சா.செல்வராசா அவர்களும், அதனைத் தொடர்ந்து திருமதி.மனோன்மணி பாலசிங்கம் அவர்களும், 1988 இலிருந்து 1997 வரையான காலப் பகுதியில் செல்வி.ம.சுப்பிரமணியம் அவர்களும் அதிபராகக் கடமையாற்றினார்கள்.

1991ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ம் திகதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணம் நோக்கி 95% மான மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்தனர். இவ்வேளையில் 1991 தொடக்கம் 1995 ஒக்டோபர் 30ம் திகதி மக்கள் தென்மராட்சி நோக்கி இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மீண்டும் 1996 மே மாதம் 6ம் திகதி யாழ்ப்பாணம் திரும்பி பஸ் போக்குவரத்து இன்மை காரணமாக யா/ வேலணை கிழக்கு மகா

வித்தியாலயத்தில் சிறிது காலம் தற்காலிகமாக இயங்கி 1997ம் ஆண்டு தை மாதம் 15ந் திகதியிலிருந்து பாடசாலையின் நிரந்தரக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது.

1997ம் ஆண்டு மீண்டும் பாடசாலை சொந்தக் கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியதிலிருந்து மாணவர் எண்ணிக்கை சற்று அதிகரித்து வருகின்றது. 24.08.1997ம் திகதியிலிருந்து திரு.நா.பஞ்சலிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.

இப்பாடசாலையில் கல்வி பயின்று மேனிலயடைந்தவர்கள் அனேகர். இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் நல்லொழுக்கமும், நல்லறிவும் மிக்கவர்களாய் வளர, வாழ வழிகாட்டும் நெறிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே எதிர்காலத்தில் நல்ல கல்வியறிவுள்ள சமுதாயத்தை இக்கல்வி நிலையம் உருவாக்கித்தரும் என்பது உறுதியாகும்.

**பாடசாலை அதிபர்**
**யா/பு.ஸ்ரீ.சு.ம.வி**

# அறிவு பஞ்சம் போக்கிய
# பஞ்சலிங்கம் எனும் பேராசான்

மென்மையும் மேன்மையும்
இணைந்த திருவுருவம் எம் அதிபர்
உண்மையும் நேர்மையும்
உறுதியும் திறமையும் தளராத
புங்கையின் மைந்தனாம் எம் அதிபர்

பார் புகழும் பெருந்தகையாம்
பார்த்தனுக்கு சாரதியாம் - கிருஸ்ணர்
இது போல பாடசாலையின்
சாரதியாம்...
எம் அதிபர்

வருங்காலம் தெரியாத வயதுகளில்
எம்மை வழி நடத்தியவர் எம் அதிபராம்
நெடுங்காலம் எமை நெறிப்படுத்தியவரே - அறிவில்
வித்தகராய் நாம் மிளிர எமக்கு வினைத்தியன் ஊட்டிய
பொன்தீவின் புலஸ்தியனாம் எம் அதிபர்

பிரியாவிடை நீங்கள் பெறினும்
எம் பென்சில் காலங்களில்
புரியா விடை புரிய போதித்த போதகன் - நீர்
எம் புங்கையூரின்
நாவலன்

உம் விந்தைகளை மதிக்கிறோம்
எம்மை வித்தகராக்கிய உம்மை துதிக்கின்றோம்
உம் புகழ் பரவட்டும்
உம்மை இந்த வையகம்
வாழ்த்தட்டும்.

ஆசிரியர்
க.கேமலதா

# என் மனக்கவி

என் கற்பனையில் பிறந்த - ஓர்
சின்னக் குழந்தை இது
நிஜங்களை சங்கமிக்க வைத்து
என் பள்ளிக் காலமதில் - நான்
கண்ட சேவைகளை - மிக
பவ்வியமாய் கூறுகின்றேன்....

என் அன்னையின் முன் - ஓர்
சிறந்த ஆசானாய் திகழ்ந்தவரே
என் முன் அதிபராய் - உயர்ந்து
சேவை செய்தவரே...!
பெற்றெடுத்த அன்னைக்கு - ஏடு
கற்பித்தவர் - என்
சகோதரருக்கு எழுத்துக் கற்பித்தவர்
எனக்கு வாழ்வின் எல்லையினை கற்பித்தார்....

பதினொரு வருடம் - எம்முடன்
தோழனாய் நின்று
இன்பமும் துன்பமும் பகிர்ந்து
ஓர் குடும்பமாய் அரவணைத்த
பஞ்சலிங்கம் அதிபரே - உம்
பதுமையான குணத்திற்கு ஈடு இல்லை வார்த்தை ஏதம்...?

பல சபை கண்டு - பல சாதனை
படைத்து - எமக்கும்
வெற்றியின் இன்பத்தை - மிக
இலகுவாய் சொன்னவர் நீர்...
இன்னல்களின் வேலியினை கடக்கவும்
பாதை கற்பித்தவர் நீர்...
பல்லாண்டு வாழ்ந்து - நீர்
பாரினில் உயர வாழ்த்துகின்றேன்

R.டொறினா
பழைய மாணவி

## சில விநாடிகள் சிந்தி

கால் மேல்
கால் போட்டு
கணவானைப் போல்
இரு
கைவிரல்களுக்கிடையில்
சிகரட்டைச் செருகு
புகைக்கும் தோழனே...!

சிகரட்
இரு இஞ்சியில்
உன் உயிரை
அணு அணுவாய்
வெட்டிப் போடும் கத்தி

அறிந்தும் உன் ஆயுளையும்
அறியாது
பிறரின் ஆயுளையும்
குறைத்துக் கொள்ள
நீ
விரும்பி உண்ணும் விசம்

கற்பதினில் இருக்கும்
கருவிற்கு கூட
காற்று வழியே
வியாதியை
காவிச் செல்லும் தூதுவன்

சரி
தோழா
உன்னையும்
ஊரையும் விடு

உன்
பிள்ளைக்காய்
சில
விநாடிகள் சிந்தி
உன் பிள்ளை
பாதத்தில்
பாதணியின்றி
பாடசாலை போகையில்

நீர்
தேநீர்ச் சாலையில்
அமர்ந்து
புகைக்கிறாய் சிகரட்

முப்பது நாள்
மூட்டை கட்டிவை
உன்
புகை பிடிக்கும்
ஆசையை

பணத்தை சேமி
சிக்கனமாய்
உன் பிள்ளைக்கு வாங்கலாம்
சப்பாத்து

உன் முப்பது நாள் சேமிப்பே
உன் பிள்ளையின்
மூன்று வருடத் தேவையை
பூர்த்தி செய்யுமெனில்
உன் மூன்று வருட
சேமிப்பு

தோழனே
இன்னும்
சில விநாடிகள்
சிந்தி....

**சிவனேஸ்வரன் - தானுகா**
**தரம் 11 (O/L)**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய**
**மகளிர் வித்தியாலயம்**

# யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

யாழ் மாவட்டத்தின் தீவுப் பகுதியிலேயோ முதன் முதலில் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை என்ற பெருமையை இது தன்னகத்தே கொண்டுள்ளது. தனது பாடசாலை பெயரிலேயே மகளிர் என்ற சேர்க்கையை இது கொண்டு விளங்குவதைக் காணலாம். இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை பல சிறப்பான கல்விச் செயற்பாடுகளிலும், கல்வி சாராத விளையாட்டு மற்றும் ஏனைய திறன்சார் நிகழ்ச்சிகளிலும் இது தனது ஈடுபாட்டைக் காட்டி வருகின்றது. அது மட்டுமல்லாது அவை அனைத்திலும் முதன்மை வகித்து வருகின்றமையும் சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

இன்று இந்தப் பாடசாலை நிர்வாக அதிபராக திரு.ந.பஞ்சலிங்கம் அவர்கள் சேவையாற்றி வருகின்றனர். பல ஆசிரியர்களும் தனது கல்வி சேவைகளை மாணவர்களுக்கு சிறப்பாக வழங்கி வருகின்றனர்.

இப்பாடசாலையில் தரம் 01 முதல் தரம் 05 வரை ஆண் மாணவர்களையும் ஏற்று கல்வி பயிற்றுவிப்பதை காணக்கூடியதாய் கிடக்கின்றது. ஆகவே இப்பாடசாலை தரம் 05 வரை கலவன் பாடசாலையாக இயங்கி வருவது விசேசத்திற்குரியதாகும். அது மட்டுமல்லாது இரு பால் மாணவர்களையும் பேதமின்றிக் கற்பித்து புலமைப் பரிசில் பரீட்சைகளிலும் திறமைச் சித்தி அடைய வைத்துள்ளது.

தரம் 6 தொடக்கம் கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சை (தரம் 11) வரை பெண்கள் மட்டுமே கல்வி கற்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இவர்கள் தாம் படிக்கும் காலத்தில் கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது கல்வி சாரா செயற்பாடுகளிலும் (விளையாட்டு, நடனம், பாடல்) முன்னணி வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் இவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளிலும் திறமைச் சித்தி அடைந்துள்ளனர்.

இவ்வாறு அடிப்படை வழிகாட்டல் பாடசாலையாக இது செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் அமைவிடத்தைப் பார்க்கும்போது, இது புங்குடுதீவு 1ம் வட்டாரம் பெருங்காட்டு சந்தியில் அமைந்துள்ளது. ஆனால் இதன் தனிச்சிறப்பு சாதாரணமாக வேறு பாடசாலைக்கு அருகாமையிலுள்ள மாணவர்களுக்கும் இங்கு கல்வி கற்று வருகின்றனர். இங்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவினாலும் இந்தக் குறைபாட்டை யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரியர்களை வரவழைத்து நிவர்த்தி செய்துள்ளார்கள். மேலும் இப்பாடசாலையின் அதிபர் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊன்று கோலாக உள்ளனர்.

இவ்வாறு இப்பாடசாலையைப் பற்றி என்னால் குறிப்பிட்டுக் கூற முடியும்.

**பே.சுதனிகா**
**தரம் 5**

# தற்காலத்தில் பன்மொழியாற்றலின் தேவை

பன்மொழியாற்றல் என்ற எண்ணக்கருவானது பல்வேறுபட்ட சமூகத்தவர்கள் ஒருவரை ஒருவர் தொடர்புகொள்ள முயன்றபோது உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஒரு மனிதன் ஒரு மொழிச் சூழலிலிருந்து பன்மொழியாற்றலைப் பெறுவதற்கும், எச் சூழலுக்கு ஏற்றவகையில் தன்னைமாற்றிக் கொள்வதற்கும் கல்வி கற்றல் மூலம் மட்டுமல்லாது அரசியல், சமூக பொருளாதார பின்னணிகளும் அத்திவாரமாக அமைகின்றன. எனவே பின்வரும் விடயங்களினூடாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

1. மொழியும் மொழியாற்றலும்
2. பன்மொழி ஆற்றலும் அதன் முக்கியத்துவம்
3. பன்மொழிக் கல்வியும் அதன்பிரயோகமும்

1. மொழியும் மொழியாற்றலும்

மொழி என்பது ஒரு தொடர்பாடும் ஊடகமாகும். மனிதன் பயன்படுத்தும் மொழியினை தொடர்பாடும் ஊடகங்கள் அனைத்தும் முதன்மையானதாக கருதப்படுகின்றது. ஒருவன் மொழியைப் பேசுவது அம்மொழியில் கருத்துக்களை எல்லாம் மொழியாற்றல் பெற்று செய்வதொன்றல்ல.

மொழி ஒன்றினைப் பேசுவதற்கும் அதிகம் மொழியாற்றல் பெறுவதற்கும் வித்தியாசம் இருக்கின்றது. மனிதனானவன் சமூகத்தை அறியத் தொடங்கியபோது சிந்திக்கும்போது மொழியைக் கற்றுக் கொள்கிறான். இங்கும் சமூகத்தில் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக மொழியை அவன் பெறுகின்றான் என்பதை அறிய முடிகின்றது.

ஒரு மொழியை நிறுவனத்திலோ, கல்வி நிலையத்திலோ முறைப்படி கற்காமல் அம் பொதியினை ஒருவன் பேசமுடியும், தொடர்பாட முடியும். ஆனால் சிலவற்றை எல்லாம் மொழியாற்றல் என்ற பிரிவுக்குள் உட்படுத்த முடியாது.

மொழியாற்றல் என்பது மொழியினை அதன் அமைப்பு ரீதியாக அறிந்து கொள்வதனைக் குறிக்கும். மொழியினை வெளியில் நின்று நோக்கின் அதன் பல்வேறுபட்ட நிலைகளை அறிந்துகொண்டு தொடர்பாடலில் அதனைப் பயன்படுத்துபவனே மொழியாற்றல் மிக்கவன் என கருதப்படுகிறான். ஒருவன் மொழியின் அமைப்பு பற்றிய விதிகளை நிறுவனங்கள், கல்வி நிலையங்களினூடாகவும் அம்மொழியின் இலக்கண நூல்களிலிருந்தும் பெற்றுக்கொள்கிறான். இவ்வாறு மொழியின் அமைப்பு விதிகளை அறிந்து இடை நிலையாகவும் நிலைக்குத்து நிலையாகவும் பிரித்து அறிந்து பயன்படுத்தும் அறிவு மொழியாற்றல் உடைய ஒருவனுக்கே உடையதாகும்.

2. பன்மொழியாற்றலும் அதன் முக்கியத்துவம்

ஒரு மொழிச்சூழலில் வாழும் மனிதனுக்கு பிற மொழியில் சமூகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தாத மனிதனுக்கு பன்மொழி ஆற்றல் என்பது அவசியமற்ற ஒன்றாகும். ஆனால் உலகப்பரப்பில் எந்த மனித சமுதாயமும் தனித்து இயங்கி வாழ்ந்தது கிடையாது. தனித்து வளர்ச்சி பெற்றதும் கிடையாது.

பிற சமூகத்தின் பண்பாடுகள், சிந்தனைகள், கண்டுபிடிப்புகள், நடைமுறைகள் என்பன பகிரப்பட வேண்டியதாக காணப்படுகின்றன. இவ்வாறு பகிரப்பட வேண்டிய நிலையிலே தான் பன்மொழி ஆற்றல் மிக்க மனிதர்கள் குறித்த ஒரே ஒரு மொழி பேசும் சமூகத்திற்கு முக்கியமானவர்களாக தேவைப்படுகின்றார்கள்.

தமிழ் மொழியானது வட மொழியிலிருந்து வந்த கதை மரபுகளைத் தழுவி நிற்பதாகக் காணப்படுகின்றது. இவ்வாறு வடமொழியிலிருந்து தமிழ் மொழிக்கு அக்கதைகளை கொண்டு வருவதற்கு இரு மொழியும் புலமை பெற்றவர்கள். சமூகத்தில் இருந்துள்ளார்கள். இவ்வாறு பல்வேறு மொழிகளிலிருந்து மொழிக்கு தயாரிக்கப்படும் அகராதிகளும் இதே போலத்தான் பாண்டித்தியம் பெற்றவர்களாலேயே எழுதப்பட்டிருக்க முடியும். "யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழி போல் இனிதாவது எங்கு காண்போம்" என்று பாரதியார் கூறியதிலிருந்து பல மொழிகளை கற்று பன்மொழிகளில் புலமை வாய்ந்தவர்களால் தான் மொழி இனிமையானது. கடினமானது என்று கூறமுடியும்.

03. பன்மொழியாற்றலும் அதன் பிரயோகமும்

பலமொழிகளைக் கற்பதனால் அறிவதனால் தொடர்பாடலானது இலகுவாகிறது. மனிதன் பன்மொழிக் கல்வியால் பல்வேறு மொழிகளின் அமைப்பை அறிந்து கொள்வதுடன் அம்மொழிகளில் வரும் சிந்தனைகள், கண்டுபிடிப்புகள், தேவையான விடயங்கள் தனது மொழிக்கு நேரடியாகக் கூறுகின்றான். பன்மொழிக் கல்வி, பன்மொழித் தேர்ச்சி, பன்மொழியாற்றல், பன்மொழியோன் என்றெல்லாம் தற்காலத்தில் கூறப்படும் சொற்கள் சமூகத்தில் பன்மொழியாற்றல் என்பதனை வலியுறுத்துகின்றது.

இன்றைய உலகில் மனிதன் மொழியால் மட்டுமல்ல பண்பாடுகள், சிந்தனைகள் என்பவற்றாலும் தொடர்புபட்டிருப்பதனைக் காணமுடிகிறது. இப்பண்பாட்டுத் தொடர்புக்குக் கூட இப் பன்மொழியாற்றல் மிகவும் அவசியமாகவே உள்ளது.

பல்வேறு இனங்கள் வாழும் ஒரு நாட்டில் பன்மொழிக் கல்வி என்பது முக்கியமானதாகும். இலங்கையானது ஒரு பன்மொழி, பல்பண்பாடு என்பன நிறைந்த ஒரு நாடு.

பன்மொழிக் கல்வியால் பன்மொழிச் சூழல் நிலவும் பிரதேசத்திற்கும் ஒருவன் சென்று பணியாற்ற முடியும். பாடசாலைகளிலிருந்து, கல்வியமைச்சு, ஜனாதிபதி என்போர் பன்மொழிக்காக எடுத்திருக்கும் இம்முயற்சிகள் எதிர்காலத்தில் பன்மொழி தேர்ச்சியுடைய ஒரு நாடாக இலங்கை திகழ்வது திண்ணம். இப்பன்மொழியின் அவசியத்தை அறிந்து அனைவரும் பன்மொழித் தேர்ச்சிக்காக உழைப்போமாக.

**செல்வி.இ.கிருஷாந்தி**
**ஆசிரியர்**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.**

# அதிபரின் காலத்தில் வித்தியாலய சாதனைகள்



திரு. நாகநாதபிள்ளை பஞ்சலிங்கம்
(B.Ed. Sp. Maths Tri SLPS-I)

## யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம். தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் பெயர் விபரம்

| இல | சித்தி பெற்ற ஆண்டு | மாணவர் முழுப்பெயர் | சுட்டெண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | 2005 | நடேசலிங்கம் கீர்த்தனா | 8023107 | 131 |
| 02 | 2009 | விநாயகமூர்த்தி வினோஜன் | 5985390 | 146 |
| 03 | 2012 | ரவீந்திரலிங்கம் மதுசன் | 4075293 | 150 |
| 04 | 2014 | ரவீந்திரன் லக்ஷயா | 9761233 | 166 |

## க.பொ.த. சாதாரண பரீட்சைப் பெறுபேறுகள்

| | | |
|---|---|---|
| 2003 | இரத்தினசிங்கம் ஜெயந்தினி | - 2A 2B 2C 3S |
| 2003 | முத்துலிங்கம் நிஷாந்தி | - 2A B C 5S |
| 2003 | சௌந்தரராஜன் தீபா | - 2A 2B 2C 2S |
| 1999 | இரத்தினசிங்கம் நிஷாந்தி | - 2A 2C 5S |
| 1998 | சௌந்தரராஜன் ராதிகா | - 2D 3C 2S |
| 1998 | முத்துலிங்கம் சுகந்தினி | - 2D 1C 4S |
| 2006 | நவரத்தினசிங்கம் பிரியா | - 2A B 3C 2S |
| 2010 | துரைசிங்கம் துளசிகா | - 2A 2C 4S |
| 2012 | வைத்திலிங்கம் மயூரி | - 2A 1C 4S |
| 2012 | பரமசிவம் மதுஷா | - 2A 1B 2C 2S |
| 2014 | ஜெகதீஸ்வரன் துஷ்யந்தினி | - 2A 1B 2C 2B |
| 2011 | நடேசலிங்கம் கீர்த்தனா | - 4A 2B 2C |
| 2011 | வருணணன் யுகன்யா | - 2A 2B 3C |
| 2011 | ஜெயராசா சுவேதிகா | - 3A 3C 2S |
| 2002 | கதிரவேலு தனுஷா | - 4A 3C 2S |
| 2003 | லோகநாதன் கோகிலவாணி | - 4A 3C 2S (பல்கலைக்கழகம்) |
| 2004 | தியாகராஜா விஜிதா | - 2A 3B 1C 3C (பல்கலைக்கழகம்) |
| 2010 | லோகநாதன் ஜோஜிதா | - 4A 2B 2C S (1) பல்கலைக்கழகம் |
| 2010 | அம்பிகைபாலன் உஷாந்தி | - 4A 3C 1S (அக்கடமி) |

## மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டியில் பங்கு பற்றியவர்கள்



இடமிருந்து வலம்

இருப்பவர்கள் : ச.நிவேதிகா, ஜெ.ஜெனேவா, நா.பஞ்சலிங்கம் (அதிபர்), இ.கார்த்திகேயன் (ஆசிரியர்), அ.சுபிதா

## 17 வயது வலைப் பந்தாட்ட அணி



இடமிருந்து வலம் நிற்பவர்கள் : சி. கிருஸ்திகா, ம.மதுஷாலினி, சி.தானுகா, ச.மைதிலி

இருப்பவர்கள் :நி.நவகீதா (ஆசிரியர்), நா.பஞ்சலிங்கம் (அதிபர்), இ.கார்த்திகேயன் (ஆசிரியர்),

கீழ் இருப்பவர்கள் : ந.தேனுஜா, கு.வஜீக்கா, கோ.நவிந்லா

## 19 வயது துடுப்பாட்ட அணி



இடமிருந்து வலம் நிற்பவர்கள் : அ.சுபிதா, ம.குபேசா, வே.யதுர்சிகா, சி.தானுகா, விருபா, கு.மோகனப்பிரியா. ச.நிவேதிகா, வே.ஜெனோபா, கோ.ரவிகலா

இருப்பவர்கள் : நி.நவகீதா (ஆசிரியர்), க.மதிரூபன் (ஆசிரியர்), நா.பஞ்சலிங்கம் (அதிபர்), இ.கார்த்திகேயன் (ஆசிரியர்)

கீழ் இருப்பவர்கள் : சிருத்திகா, ம.மதுசாயினி, ந.தேனுஜா, ச.மைதிலி, சூ.வஜீக்கா

## 15 வயது வலைப் பந்தாட்ட அணி



நிற்பவர்கள் : சி.நிரூபிகா, ஜெ.கோபிகா, யோ.விதுஷா, சி.கீர்த்தனா, ம.சோபனா, கோ.ரவிநிலா,

இருப்பவர்கள் : நி.நவகீதா (ஆசிரியர்), நா.பஞ்சலிங்கம் (அதிபர்), இ.கார்த்திகேயன் (ஆசிரியர்)

கீழ் இருப்பவர்கள் : அ.சுவிதா, ச.நிவேதிகா, நி.வினோதினி

# Zonal Education

| Name | Events | Year | Place |
|---|---|---|---|
| M.Mathushajiny | Copy writing | 2015 | 2nd |
| M.Mathushajini | | 2014 | 3rd |
| S.Repekka | Copy writing | 2009 | 2nd |
| L.Lojika | Creative writing | 2009 | 3rd |
| L.Lojika | Recilation | 2009 | 1st |
| G.Sanjeevitha | Scriop writing | 2011 | 1st |
| J.Suvethika | Copy writing | 2011 | 2nd |
| N.Thenuja | Creative writing | 2011 | 1st |
| M.Priya | | 2011 | 2nd |
| M.Mathushajini | Dictation | 2011 | 2nd |
| M.Priya | | 2011 | 1st |

## சமூக விஞ்ஞானப் போட்டி - வலய மட்டம் முடிவு

| மாணவர் பெயர் | நிகழ்ச்சிகள் | ஆண்டு / வருடம் | இடம் |
|---|---|---|---|
| ம.மதுஷாயினி | சமூக விஞ்ஞானம் | 2015 | 2ம் இடம் |
| ந.தேனுஜா | சமூக விஞ்ஞானம் | 2015 | 3ம் இடம் |
| ம.மதுஷாயினி | சமூக விஞ்ஞானம் | 2014 | 1ம் இடம் |
| சி.நிரூபிகா | சமூக விஞ்ஞானம் | 2013 | 2ம் இடம் |
| ச.அபிலாஜினி | சமூக விஞ்ஞானம் | 2013 | 2ம் இடம் |
| ந.தேனுஜா | சமூக விஞ்ஞானம் | 2012 | 3ம் இடம் |
| வி.நாகலக்ஷனா | சமூக விஞ்ஞானம் | 2011 | |

## சிங்களப் போட்டி - வலய மட்டம் முடிவு

| மாணவர் பெயர் | நிகழ்ச்சிகள் | ஆண்டு / வருடம் | இடம் |
|---|---|---|---|
| மு.பிரியா | சிங்களம் | 2012 | 1ம் இடம் - மாகாணம் |
| மு.பிரியா | சிங்களம் | 2012 | 3ம் இடம் - தேசிய மட்டம் |

# தமிழ்த் தினப்போட்டி - வலய மட்டம்

| மாணவர் பெயர் | நிகழ்ச்சிகள் | ஆண்டு / வருடம் | இடம் |
|---|---|---|---|
| த.கீர்த்தனா | குறுநாடக ஆக்கம் | 2012 | 1ம இடம் |
| றெ.டொறினா | கவிதை ஆக்கம் | 2012 | 2ம் இடம் மாகாணம் 1ம் இடம் |
| அ.றெஜினா | வாசிப்பு | 2012 | 1ம் இடம் |
| அ.றெஜினா | எழுத்தாக்கம் | 2011 | 2ம் இடம் |
| ந.கீர்த்தனா | கட்டுரை வரைதல் | 2011 | 2ம் இடம் |
| ந.தேனுஜா | பேச்சு | 2011 | 1ம் இடம் |
| மு.பிரியா | இசை தனி | 2011 | 1ம் இடம் |
| | குழு இசை | 2011 | 1ம் இடம் |
| | நடனம் குழு | 2011 | 1ம் இடம் |
| ப.ஜக்சனா | கட்டுரை வரைதல் | 2013 | 2ம் இடம |
| குழு | விவாதம் | 2013 | 2ம் இடம் |
| றெ.டொறினா | கவிதை | 2013 | 1ம் இடம் |
| லோ.லோஜிதா | பா ஓதல் | 2009 | 2ம் இடம் |
| | நடனக்குழு | 2009 | 3ம் இடம் |
| றெ.டொறினா | பேச்சு | 2013 | 1ம் இடம் |
| ம.மதுஷாயினி | கட்டுரை | 2013 | 1ம் இடம் |
| க.சஞ்சீவிதா | கட்டுரை | 2013 | 2ம் இடம் |
| சூ.வஜீக்கா | கவிதை | 2014 | 1ம் இடம் |
| ம.மதுஷாயினி | கட்டுரை | 2014 | 1ம் இடம் |
| மு.பிரியா | இசை | 2014 | 3ம் இடம் |
| அ.விஜிதா | விஞ்ஞானப்போட்டி | | 3ம் இடம் |

# மெய்வல்லுநர் போட்டி - வலய மட்ட முடிவு

| மாணவர் பெயர் | நிகழ்ச்சிகள் | ஆண்டு / வருடம் | இடம் |
|---|---|---|---|
| ஜெ.ஜெனோ | 400 மீற்றர் | 2015 | 1ம் இடம் |
| ச.றெஜினா | உயரம் | 2015 | 1ம் இடம் |
| அ.சபிதா | 100 மீற்றர் | 2015 | 2ம் இடம் |
| செ.கிருஷாந்தி | குண்டு போடுதல் | 2015 | 3ம் இடம் |
| செ.கிருஷாந்தி | தட்டெறிதல் | 2015 | 2ம் இடம் |
| தி.பீகாசியா | குண்டுபோடுதல் | 2015 | 1ம் இடம் |
| ச.நிவேதிகா | குண்டுபோடுதல் | 2015 | 2ம் இடம் |
| ச.நிவேதிகா | தட்டெறிதல் | 2015 | 1ம் இடம் |
| தி.கோசியா | ஈட்டியெறிதல் | 2015 | 2ம் இடம் |
| அ.சபிதா | நீளம் பாய்தல் | 2015 | 2ம் இடம் |
| றெ.டொறினா | தட்டெறிதல் | 2011 | 2ம் இடம் |
| றெ.டொறினா | ஈட்டி எறிதல் | 2011 | 2ம் இடம் |
| ஜெ.துஷ்யந்தினி | குண்டு போடுதல் | 2012 | 1ம் இடம் |
| ஜெ.துஷ்யந்தினி | தட்டெறிதல் | 2012 | 1ம் இடம் |
| ந.சுயானா | ஈட்டி எறிதல் | 2012 | 3ம் இடம் |
| செ.செல்வஜெனா | ஈட்டி எறிதல் | 2012 | 2ம் இடம் |
|  | 4X100 மீற்றர் | 2013 | 2ம் இடம் |
| ம.குபேஷா | 200 மீற்றர் | 2013 | 2ம் இடம் |
| வே.யதுர்சகா | 400 மீற்றர் | 2013 | 2ம் இடம் |
| ஜெ.துஷ்யந்தினி | குண்டுபோடுதல் | 2013 | 1ம் இடம் |
| ந.சுயானா | தட்டெறிதல் | 2013 | 3ம் இடம் |
| றெ.டொறினா | ஈட்டியெறிதல் | 2013 | 2ம் இடம் |
|  | 4X100மீற்றர் | 2013 | 3ம் இடம் |

## வலைப்பந்தாட்டம் போட்டி - வலய மட்ட முடிவு

| மாணவர் பெயர் | நிகழ்ச்சிகள் | ஆண்டு / வருடம் | இடம் |
|---|---|---|---|
| 15 வயது | வலைப்பந்தாட்டம் | 2015 | 1ம் இடம் |
| 17 வயது | வலைப்பந்தாட்டம் | 2015 | 2ம் இடம் |
| 15 வயது | வலைப்பந்தாட்டம் | 2014 | 1ம் இடம் |
| 17 வயது | வலைப்பந்தாட்டம் | 2014 | 2ம் இடம் |
| 15 வயது | வலைப்பந்தாட்டம் | 2013 | 1ம் இடம் |
| 17 வயது | வலைப்பந்தாட்டம் | 2013 | 3ம் இடம் |
| 13 வயது | வலைப்பந்தாட்டம் | 2012 | 1ம் இடம் |
| 15 வயது | வலைப்பந்தாட்டம் | 2012 | 1ம் இடம் |
| 17 வயது | வலைப்பந்தாட்டம் | 2012 | 1ம் இடம் |
| 15 வயது | வலைப்பந்தாட்டம் | 2011 | 1ம் இடம் |
| 17 வயது | வலைப்பந்தாட்டம் | 2011 | 2ம் இடம் |
| 19 வயது | வலைப்பந்தாட்டம் | 2011 | 3ம் இடம் |

## துடுப்பாட்டம் - வலய மட்ட முடிவு

| மாணவர் பெயர் | நிகழ்ச்சிகள் | ஆண்டு / வருடம் | இடம் |
|---|---|---|---|
| 19 வயது | துடுப்பாட்டம் | 2014 | 3ம் இடம் |
| 19 வயது | துடுப்பாட்டம் | 2015 | 1ம் இடம் |

# நன்றிக்குரியவர்கள்

யா/புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய அதிபர் திரு நாகநாதபிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின் மணிவிழாவின் போது வெளியிடப்படும் சுப்ர பஞ்ச நாதம் எனும் நூலுக்கு ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள், ஏனைய ஆக்கங்கள் தந்துதவிய கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்,பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் அனைவருக்கும் எமது நன்றிகளை கூறிக்கொள்வதோடு மற்றும், இந்நூலை சிறப்பாக அமைவதற்கு நிதிப்பங்களிப்புச் செய்த வித்தியாலய ஆசிரியர்கள், மற்றும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா, புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ், புங்குடுதீவு திருநாவுக்கரசு சர்வோதியம் நற்பணி ஒன்றியம் - ஜேர்மனி, பெற்றோர், பழைய மாணவாகள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் இந்நூலை சிறப்பாக அமைத்து தந்த யாழ்ப்பாணம் விவேகானந்தா அச்சகத்தின ருக்கும் நன்றி கூறுகின்றோம்.

**சுப்ர பஞ்சநாத மலர்க்குழு,**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.**



